உ

# சந்நிதியான் அற்புதங்கள்

## பாகம் ஏழு




**ந. அரியரத்தினம்**

**2017**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சந்நிதியான்

## அற்புதங்கள்

பாகம் ஏழு

ந. அரியரத்தினம்

2017

தொண்டைமானாறு

14039CC
289487
289487 CC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
294.5

தலைப்பு :- சந்நிதியான்

விடயம் :- அற்புதங்கள் - பாகம் ஏழு

ஆசிரியர் :- ந.அரியரத்தினம்

பதிப்பு :- முதற்பதிப்பு 2017

பதிப்புரிமை :- ஆசிரியருக்கு

பக்கம் :- 62

அச்சுப்பதிப்பு :- தமிழ்ப்பூங்கா - நெல்லியடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| உள்ளே | பக்கம் |
|---|---|
| முன்னுரை | |
| ஆசியுரைகள் | |
| அணிந்துரை | |
| சந்நிதியான் ஒன்று | 01 - 07 |
| சந்நிதியான் இரண்டு | 08 - 14 |
| சந்நிதியான் மூன்று | 15 - 21 |
| சந்நிதியான் நான்கு | 22 - 27 |
| சந்நிதியான் ஐந்து | 28 - 33 |
| சந்நிதியான் ஆறு | 34 - 37 |
| சந்நிதியான் ஏழு | 38 - 41 |
| சந்நிதியான் எட்டு | 42 - 45 |
| சந்நிதியான் ஒன்பது | 46 - 49 |
| சந்நிதியான் பத்து | 50 - 53 |
| சந்நிதியான் பதினொன்று | 54 - 59 |
| சந்நிதியில் நடந்துகொண்டிருப்பவை | 60 |
| அடியார்களே தொண்டர்கள்.... | 61 - 62 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்

எமக்காக மட்டுமன்றி பிறருக்காகவும் வாழ்வதே
உண்மையான வாழ்க்கையாகும்.
இத்தகைய நிலைக்கு அடியேனை ஆளாக்கிய
எனது தாய், தந்தை இருவருக்கும்
இந்நூலை காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பிரதம குரு
## பொன்னுத்துரை ஐயர் புவனேந்திர ஐயர் அவர்கள் வழங்கிய
# ஆசிச்செய்தி

ஆசியாவின் முத்தாக விளங்கும் ஈழமணித் திருநாட்டின் வடகரையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களுடன் ஈழத்தின் அறுபடை வீடுகளில் முதன்மையாக விளங்குவது ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமாகும்.

பக்தர்களின் பிணி தீர்க்கும் வேலவனாக, அன்னதானக் கந்தனாக, கல்லோடைக் கந்தனாக, காவடிக் கந்தனாக, கந்தசஷ்டி கவசனாக, தமிழ் முருகனாக, பூவரசு மரத்தடியில் இருந்து அருள் புரியும் கருணைக் கடலாம் முருகனின் அற்புதங்களை அடியவர் களுக்கு கட்டுரைகளாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் பணியை திரு. ந. அரியரத்தினம் அவர்கள் நீண்ட காலமாக மேற்கொண்டு வருகின்றார்கள். கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக் கழகங்களில் சிறப்பான பட்டங்களைப் பெற்றது போலவே ஆசிரியராகவும் அதிபராகவும் கோட்டக் கல்விப் பணிப்பாள ராகவும் சேவையாற்றிய இடங்களில் அனைவராலும் பாராட்டும் வகையில் சிறப்பான சேவைகளை ஆற்றியதையும் நாம் அறிவோம்.

இதேபோன்று நீண்ட காலமாக ஆன்மீகத் துறைக்கும் சிறந்த சேவையாற்றிவரும் ந. அரியரத்தினம் கனடாவிலும் தாயக மண்ணிலும் உள்ள எமது ஆலயங்களில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அற்புதங்களை சேகரித்து பாகம் ஏழு நூலை வெளியீடு செய்வதற்கு சந்நிதி வேலவன் கருணை புரிந்துள்ளான்.

சந்நிதி வேற்பெருமானின் புதுமைகளையும் அற்புதங் களையும் வாசிப்போர் உள்ளத்தில் தெளிவாக பதியவைக்கும் இவரது இந்த பணி மிகவும் மகத்தான பணி. இவரது பணி தொடர்வதற்கும் இவருக்கு அருளும் ஆசியும் கிடைப்பதற்கும் சந்நிதியானின் திருப்பாதங்களை பணிந்து வணங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம்
# SRI SELVASANNATHY TEMPLE



ஆறுமுகசாமி ஐயர் சிவசண்முகம் ஐயர்
(சமாதான நீதவான்)
பிரதம குரு
ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம்
தொண்டைமானாறு
இலங்கை.
Arumugasamy Iyar Sivashanmugam Iyar (J.P)
Chief Priest,
Sri Selvasannathy Temple
Thondaimanaru.
Sri Lanka.
T.P : 021 321 6997, 0773164544
021 205 5634

04.04.2017

சிவகுருநாத திருமால் மருக முருகன் சந்நிதியில் கதிர்காமரை தடுத்தாட்கொண்டு தம்மை பூசிக்கும்படி அருளாடல் பல புரிந்து விரும்பி உறைகின்ற தலமாகும் என்பதை யாவரும் அறிந்த உண்மை.

பூவரசு போல் பூவுலக (காக்கும்) அரசாக அன்னதானக் கந்தன் இருந்து அருள் பொழிவதும் அவ்விதமே உண்மை ''யாமிருக்க பயம் ஏன்'' என்பது சந்நிதியின் ஆற்றங்கரையான் ஆப்த வாக்கியம் ஆகும். (ஆற்றுப்படுத்தும்) நுட்பதிட்பங்கள் எம் பெருமானின் அற்புதங்கள் நிறைந்த மகத்துவம் காலத்திற்கு காலம் பல பக்குவபடுத்துதலினால் பல நூல்களினூடு குறிப்பாக இவ் ஆசிரியர் ந.அரியரட்ணம் அவர்களின் ஆறு பாகங்களின் ஊடும் புலப்படுத்தப்பட்டதையும் அறிவோம்.

கலிகால மயக்கி உள்ள நாம் தெளிவுபெற ஆசிரியர் இவ்வாறு தனது பணியை தொடர்ந்து பாகம் ஏழினை வெளியீடு செய்து எம்மையெல்லாம் சந்நிதியான் திருவருள் பெறுவதற்கு ஆற்றுப்படுத்துவது மிகப்பெரிய தொண்டாகும். இந்த வகையில் ஆசிரியர் அவர்களின் சேவையைப் பாராட்டி எந்நிதியும் தருவான் சந்நிதியான் என வேண்டி அவன் பாதம் பணிகின்றேன்.

**ஆறு சிவசண்முக ஐயா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இந்த உலகில் மனித வாழ்வு தோன்றிய காலத்தில் இருந்தே அந்த வாழ்வை நெறிமுறைகளுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஊடாக செம்மைப்படுத்தப்பட வேண்டிய தேவையும் கூடவே வளர்ந்துவந்தது. அமைதியான நேர்த்தியான வழி ஒன்றை ஏற்றுக் கொண்டவர்கள் ஒரு கடவுளை ஏற்று ஒரு சமயத்தைப் பின்பற்றத் தொடங்கினர். பல சமயங்கள் உலகின் பல பிரதேசங்களில் வெவ்வேறு காலங்களில் ஏன் இன்றும் கூட உருவாகிக்கொண்டே இருக்கின்றன. சைவசமயம் ஒரு தொண்மைமிகு சமயம் ஆகும். முருக வணக்கம் மிகமிகப் பழமையானது. தூரத்தே இருக்கின்ற போது அது என்னுடையதாகவும் கிட்ட இருக்கின்றபோது நான் அதனுடையதாகவும் இருக்கக்கூடியது எதுவோ அதுவே கடவுள் என ஒரு தமிழறிஞர் குறிப்பிடுகின்றார். தமிழ்க்கடவுள் என தமிழ் மக்கள் தமது நெஞ்சத்திலே நிறைத்து வைத்திருக்கின்ற அந்த முருகப்பெருமானுக்கு பல ஆலயங்கள் பல்வேறு இடங்களில் நீண்டகாலத்திற்கு முன்பே அமைக்கப்பட்டுள்ளன. இந்த முருகன் ஆலயங்களுள் சிறப்புப்பெற்று விளங்கும் ஒரு திருத்தலமாக தொண்டைமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் விளங்குகின்றது.

செல்வச்சந்நிதி ஆலயத்தில் அற்புதங்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. பல அற்புதங்கள், அதனோடு தொடர்பு பட்ட பக்தரின் நெஞ்சில் பூரிப்பை ஏற்படுத்தி அனுபூதியாகி அப்படியே அவருடனேயே மறைந்து சென்றவையும் உண்டு. பலர் அறிய வெளிப்பட்ட அற்புதங்களும் பலவாகும். செல்வச் சந்நிதியான் ஒரு அன்னதானக்கந்தன் மட்டுமல்ல அவன் ஒரு அற்புதக்கந்தனுமாவான். இந்த அற்புதங்களைத் தொகுத்து பாகம் பாகமாக வெளியிட்டு வரும் திரு.ந.அரியரத்தினம் என்பவர் சன்னதியானின் அருள் உறையப்பெற்றவர் என்றே கருதுகிறேன். அவருக்குள்ளே இருந்து ஏதோவொன்று (அது சன்னதியான்) இதைச்செய் என்று உந்துதல் கொடுக்கின்றபடியால்தான் அவர் அற்புதங்களை வெளிப்படுத்துவதைத் தொடர்ந்துகொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றார். இது பாகம் ஏழாக வருகின்றது. சன்னதியானின் அடுத்தடுத்த பாகங்களும் தொடர்ந்து வெளிவந்து கொண்டே இருக்கும். அவரது இந்தசேவை காலத்தின் கட்டாயத்தேவையும் கூட.

சமயநம்பிக்கைகள் குறைந்து செல்லும் காலத்தில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். வாழ்க்கை நெறிமுறைகள் சீர்கெட்டுச் செல்லுகின்றன. மனிதப்பண்புகள் அருகிச் செல்லு கின்றன.

இதற்கப்பால் சமய மாற்றம் மிகவேகமாக நடைபெறுகின்றது. வேற்று மதத்தினுள் சைவசமயிகள் உள்ளீர்க்கும் செயற்பாடு மிக வேகமாக கபடத்தனமாக நடைபெறுகின்றது. இந்நிலையில் சன்னதியான் அற்புதங்கள் வெளிவந்து கொண்டிருப்பது மிகமுக்கியமானது ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்வி பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வுபெற்றவரின் இச்சமயத் தொண்டு பாராட்டப்படவேண்டியது. இறைவன் மீது மெய்யன்பு கொண்டு இறை ஈடுபாடும் இறைதொண்டும் செய்து வாழ்வதற்கு அவருக்குக் கிடைத்த இப்பேறு மகத்தானதே,

சந்நிதியான் பாகம் ஏழில் 11 அற்புத நிகழ்வுகள் தெய்வீகத் தன்மை துலங்க விளங்குகின்றன. நாட்டின் அரசியல் சூழ்நிலையினால் புலம்பெயர்ந்த மக்கள் தாம் வாழும் நாட்டில் கனடாவில் ரொறன்ரோ நகரில் ஸ்காபுரோ என்ற இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வருடாந்த மகோற்சவ ஆரம்ப நாளான கொடியேற்ற நிகழ்வின்போது (2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி) நடைபெற்ற அற்புத நிகழ்வையும் அதே மகோற்சவத்தின் 16ம் நாள் இன்னொரு அடியாருக்கு ஏற்பட்ட அற்புத நிகழ்வையும் பக்திச் சுவை நனிசொட்ட சொட்ட எனக்கூறுவார்களே அந்தவகையில் நூலாசிரியர் விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அற்புத நிகழ்வுகள் எனக்கூறப்படுபவற்றில் ஏதாவது மிகைப்படுத்தல்கள் உள்ளனவா எனச் சிலர் சிந்திக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் அத்தகைய நிலை எதுவும் இல்லை என்பதை உறுதியாக கூறும்வகையில் சம்பவங்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. கண்முன்னால் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சம்பவங்கள் பலர் தாமாக நாடிவந்து தந்த சம்பவங்கள், தான் நாடிச்சென்று பெற்ற சம்பவங்கள் என்ற வகையில் பலவகைப்பட்ட முறைகளில் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே கட்டுரைகள் அமைகின்றன எனவும் சன்னதியானுடன் தொடர்புபட்ட உண்மைச் சம்பவங்களே நூலின் கருப்பொருள் என்ற நூலாசிரியரின் கருத்துக்கள் இங்கு கவனிக்கத்தக்கது. உணர்வு மிகு சொற்பதங்கள், வசனங்கள் கையாளப்படாமல் எளிமையான சொற்பதங்கள், வசனங்கள் அனைத்து தரப்பினரும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையின் கட்டுரைகள் எழுதும் அறிவு, ஆற்றல் பக்குவம் என்பவை நூலாசிரியருக்குண்டு என்பதை நான் நன்கு அறிவேன். அதுவும் சந்நிதியான் அவருக்கு வழங்கிய திருவருளே.

அற்புத நிகழ்வொன்றில், சந்நிதி ஆலயபத்தின் தல விருட்சமான பூவரசு மரம் தொடர்பாக கைதடி சுவாமிகள் கேட்ட வரம் அது நிறைவேறி இருக்கின்ற நிலையை மிக அண்மைக் காலத்தில் ஆலயத்துக்கு சென்றவர்கள் அவதானித்திருக்க முடியும். கைதடிச்சுவாமிகள் நன்கு பக்குவப்பட்ட ஒரு அருளாளர். பல சந்தர்ப்பங்களில் நான் அவரிடம் பல ஆலோசனைகளைக் கேட்டிருக்கின்றேன். சந்நிதியான் பாகம் ஏழு படங்களுடன் வெளிவருவது இன்னொரு விசேட அம்சம் ஆகும். அற்புத நிகழ்வுகளை அடியார்கள் உள்வாங்கிக்கொள்ள அது பெரும் உதவியாக அமையும். நூலில் கட்டம்கட்டப்பட்ட ஆன்மீக செய்திகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. அத்தகைய ஆன்மீக செய்தியில் உள்ள நாம் செய்யும் பாவத்தைத் தவிர்த்தால் உலகின் மொத்த பாவங்களையும் குறைத்த புண்ணியத்தை செய்தவராவோம் என்ற அந்த வசனம் நாம் இனிமேல் செய்ய இருக்கும் செய்கைகளை மீளாய்வு செய்ய உதவுவதோடு நற்கருமங்களின் எண்ணிக்கை பெருகவும் உதவும் எனக்கூறின் அது மிகையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர் தான் படித்தவற்றோடு படிந்தவர் ஆகையால் அற்புத நிகழ்வுகளை, நூலாக உருவாக்கி எமது கைகளில் தவழச் செய்திருக்கின்றார். எங்கள் முருகப்பெருமானுடைய பக்தர் இன்னும் பல காலம் நீடுழி வாழ்ந்து அற்புதங்களின் அடுத்த பாகங்களை வெளியிட வேண்டுமென அந்த சந்நிதிவேலனை வேண்டுகின்றேன்.

அ. குமாரவேலு
யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப்பிரிவு,
முன்னாள் இயக்குநர்,
03.04.2017 சிரேஸ்ட விரிவுரையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஞானச்சுடர் என்ற சமயச்சஞ்சிகையை 1998 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் மாத வெளியீடாக வெளியீடு செய்து வருகின்றது.

இந்த ஞானச்சுடர் சஞ்சிகையில் சந்நிதியான் என்ற தலைப்பில் கலியுகக் கந்தன் சந்நிதி முருகன் அடியவர்களுக்கு நிகழ்த்தி வருகின்ற அற்புதங்களை சந்நிதியான் கருணையுடன் கட்டுரையாக தொடர்ந்து 2011ஆம் ஆண்டு வரை மாதாமாதம் பதின்நான்கு வருடங்கள் எழுதி வந்துள்ளேன். அதன் பின்பு புலம் பெயர்ந்து வாழ்ந்து வருவதால் கனடாவில் இருந்தவாறே எனது பணியை தொடர்ந்து வருகின்றேன்.

சந்நிதியான் அற்புதங்கள் பாகம் ஆறு தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதியில் 01.04.2016 இல் வெளியீடு செய்யப்பட்டது. தற்பொழுது பாகம் ஏழு மலர் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முன்றலில் 07.04.2017 வெள்ளிக்கிழமை வெளியீடு செய்யப்படுகிறது. அருளாசி உரையை ஆலயத்தின் பிரதமகுரு ஆறுமுகசாமி ஐயர் சிவசண்முக ஐயர் அவர்கள் வழங்குகின்றார்கள். வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புஸ்பலிங்கம் அவர்கள் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேலு அவர்கள் நிகழ்த்துகின்றார்கள். அத்துடன் ஆலயத்தின் திருப்பணிச் சபையினர் வேண்டிய ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளதுடன் நூல் வெளியீடு தொடர்பாக வேண்டிய உதவிகளையும் செய்வதற்கு மனமுவந்து முன்வந்துள்ளனர். சந்நிதியானுடைய கைங்கரியத்திற்கு தமது பங்களிப்பை செய்ய முன்வந்துள்ள மேற்படி அனைவருக்கும் அடியேனது உளப் பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

தாயகத்திலும் கனடாவிலும் உள்ள இரண்டு ஆலயங்களிலும் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற அற்புதங்களும் 2004ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு அடியேன் ஞானச்சுடரில் எழுதிய அற்புதங்களும் இந்த மலரில் இடம்பெற்றுள்ளன. 2017 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள வருடாந்த மகோற்சவ காலத்தில் இந்த மலர் தொடர்பான அறிமுகவிழா கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற வுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

சந்நிதியான் என்ற தலைப்பில் அடியேனால் எழுதப்பட்டு வரும் கட்டுரைகள் இலங்கையிலும் உலகம் முழுவதும் பரந்து வாழும் சந்நிதியானது அடியவர்களை அவனது ஆலயத்திற்கு அழைத்துச் செல்வது போன்ற உணர்வையும் அவனது அருளைப் பெறுவதற்குமான ஒரு மானசீகமான தொடர்பையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது எனக் கூறுவதில் தவறு இல்லை எனக் கருதுகிறேன்.

சந்நிதியான் என்ற தலைப்பில் வெளிவருகின்ற இந்தக் கட்டுரைகளை எல்லாம் அடியேன் எழுதுகின்றேன் எனக் கூறுவது பொருத்தமில்லை. எனக்குள் இருந்து செயற்படுகின்ற ஏதோ ஒரு சக்தியின் துணையுடன்தான் இவற்றை எல்லாம் அடியேனால் தொடர்ந்து எழுதமுடிகின்றது என்பதை என்னால் நன்கு உணரமுடிகின்றது. அடியேனும், அடியேனது துணைவியாரும் மட்டுமல்ல, எமது இருவரதும் மூதாதையர்களும் சந்நிதி ஆலயத்துடன் நெருக்கமான தொடர்புள்ளவர்களாக வாழ்ந்து வருகின்றனர். உதாரணமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் மூலஸ்தானத் தீர்த்தக் கிணற்றினையும் ஆலய வாசற் கதவினையும் எனது தாயாரின் பேரனான வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த வ. முருகுப்பிள்ளை அவர்கள் தனது திருப்பணி உபயமாக அமைக்கும் பேற்றினைப் பெற்றுள்ளார்கள். இதற்குச் சான்றாக அவருடைய நாமம் தீர்த்தக் கிணற்றின் கட்டில் பொறிக்கப்பட்டிருப்பதை நாம் இன்றும் காணலாம்.

இதேபோல வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலயத்தில் கந்தசஷ்டிக் காலத்தில் சூரன்போருக்குப் பயன்படுத்தப் படும் பிரமாண்டமான சூரனையும் இந்தியாவிலிருந்து கொண்டு வந்து அவரே உபயமாக வழங்கியுள்ளார். சூரன் பீடத்தில் எனது பூட்டனாராகிய முருகுப்பிள்ளையின் பெயரும் அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியவர்களது பெயர்களும் 01.10.1898 இல் உபயமாக வழங்கப்பட்ட காலக்குறிப்பும் இடம்பெற்றுள்ளது. இதேபோன்று எனது தாயார் திருமதி நடராசா வள்ளியம்மாள் வல்வை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் பன்னிரண்டாம் உற்சவத்தின் பொழுது இடம்பெறும் சிவன் பார்வதி திருக்கல்யாணத்திற்கான கல்யாண மண்டபத்தை தனது உபயமாக அமைத்து எமக்கும் வழிகாட்டியுள்ளார்.

இவ்வாறான ஒரு ஆலயத் திருப்பணிப் பாரம்பரியம் எமது மூதாதையருக்கு இருந்து வந்தது மட்டுமன்றி ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் மீது ஒரு மானசீகத் தொடர்பும் சிறு வயதிலிருந்தே அடியேனது உள்ளத்துக்குள் இருந்து வந்ததையும் என்னால் நன்கு உணர முடிகின்றது. எல்லாமே சந்நிதியானின் பெருங் கருணை. அடியேன் மட்டுமல்ல சந்நிதியானின் பல்லாயிரக் கணக்கான அடியவர்களும் இவ்வாறே பரம்பரை பரம்பரையாக சந்நிதியானுடன் ஏதோ ஒரு வகையான தொடர்பு உள்ளவர்களாக உலகம் முழுவதும் பரந்து வாழ்ந்து கொண்டிருப்பதையும் எம்மால் உணர முடிகிறது.

விரிவுரையாளர் அ. குமாரவேலு அவர்கள் 15 வருடங்களுக்கு மேலாக பிரதி வெள்ளிதோறும் தவறாது சந்நிதிக்கு வந்து தொடர் சொற்பொழிவை வழங்கிவரும் சிறப்புக்குரியவர். சந்நிதியானுடன் இவ்வளவு ஈடுபாடு உள்ளவரான அ. குமாரவேலு அவர்கள் வழங்கிய காத்திரமான அணிந்துரை இந்நூலிற்கு மகுடம் வைத்தாற்போல அமைந்திருக்கின்றது.

இவ்வாறு எமது செயற்பாடுகள் அனைத்திற்கும் துணையாக இருந்து வழிப்படுத்துகின்ற சந்நிதி முருகனே இந்நூலை வெளியீடு செய்வதற்கும் திருவருள் புரிந்துள்ளான். சந்நிதியானது திருவருள் என்றும் எம் அனைவருக்கும் கிடைப்பதற்கு நாம் அனைவரும் அவனது திருப்பாதங்களைப் பற்றி வணங்குவோமாக!

ஓம் முருகா

ந. அரியரத்தினம்
தொண்டைமானாறு.
04.04.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2016ஆம் ஆண்டு வருடாந்த மகோற்சவத்தில் வேலவன் வீதியுலா வரும் காட்சியும்
மகோற்சவ பூசகர் அ. அகிலேந்திர ஐயர் தீபாராதனை மேற்கொள்ளும் காட்சியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஒன்று

செல்வம் செல்வாக்கு பட்டம் பதவி போன்றவையே இவ்வுலகில் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு அவசியமானவை எனக் கருதி இவ்வுலக மக்களாகிய நாம் எமது அன்றாட வாழ் நாட்களைப் போக்கிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இவ்வுலக மனித வாழ்வில் இறைவன் மீது மெய்யன்பு கொண்டு இறை ஈடுபாடும் இறை தொண்டும் செய்து வாழ்வதற்கு ஒருவருக்கு கிடைக்கின்ற பேறுதான் எல்லாப் பேறுகளையும் விட உயர்வான பேறு என்பதை நாயன்மார்கள் தமது வாழ்வியலால் எமக்கு வாழ்ந்து காட்டிச் சென்றுள்ளார்கள்.

இது பொருள் தேடுகின்ற உலகமாகச் சென்று கொண்டிருந்தாலும் எம்மில் சிலர் நாயன்மார்களைப் போல அல்லும் பகலும் இறை சிந்தனையுடன் இறை தொண்டு செய்து வாழ்கின்றவர்களாக இவ்வுலகில் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இதேபோன்று இவ்வாறு இறை ஈடுபாடு கொண்டு இறை தொண்டு செய்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் வாழ்க்கையில் நாயன்மார்கள் காலத்தைப் போல அற்புதங்களும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. ஆம் அன்னதானக் கந்தனாக மட்டுமன்றி அற்புதக் கந்தனாகவும் விளங்குகின்ற சந்நிதி முருகன் இவ்வாறான திருவிளையாடல்களை தமது மெய்யடியார்களுக்கு தினம் தினம் நிகழ்த்திக்கொண்டுதான் இருக்கின்றான். 2016 ஆம் ஆண்டு வருடாந்த மகோற்சவ காலத்தில் நடைபெற்ற அவ்வாறான ஒரு மெய்சிலிர்க்கும் அற்புத நிகழ்வை மெய்யடியவர்களுக்கு இங்கே வழங்குகின்றோம்.

கனடாவில் றொரன்றோ நகரில் ஸ்காபுறோ என்ற இடத்தில் அமைந்துள்ள கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் 2016ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த மகோற்சவத்தின் ஆரம்ப நாளான கொடியேற்ற நிகழ்வு 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதலாம் திகதி முற்பகல் 11.30 மணியளவில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அடியவர்கள் தொண்டர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசகர்கள் என அனைவரும் தவில் நாதஸ்வர மங்கள இசையின் மத்தியில் பக்தி கலந்த மன நிறைவுடன் சுறுசுறுப்பாக அந்த கொடியேற்ற நிகழ்வில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். கொடியேற்ற நிகழ்வு சிறப்பாக நிறைவடைந்து இப்பொழுது எம்பெருமான் உள்வீதியில் உலா வந்து கொண்டிருக்கிறார். இவ்வாறு வள்ளி அம்மன் சந்நிதானத்திற்கு முன்பாக சந்நிதியான் வீதி உலா வந்து கொண்டிருந்த வேளை எழுந்தருளி வேலவனுக்கு சாத்தப்பட்ட சில மலர்கள் வீதியில் சிந்துகின்றன.

இந்த சந்தர்ப்பத்தில்தான் உள்ளத்தை உறைய வைக்கும் அந்த அற்புதம் அங்கே அரங்கேறியது. சந்நிதியானுக்கு சாத்தப்பட்டு நிலத்தில் சிந்திய ஒரு சில மலர்களை அங்கே அருகிலிருந்து வழிபட்டுக் கொண்டிருந்த பெண் அடியவர்கள் பய பக்தியுடன் அவற்றை எடுத்து தமது தலைகளில் சூடிக் கொள்கின்றனர். திருமதி இந்திராணி சிவா அவர்கள் இரண்டு வருட இடைவெளிக்கு பின்பு இந்த வருடம் கொடியேற்ற உற்சவத்தில் பங்குகொண்டு எழுந்தருளி வேலவனது உள்வீதி உலா பவனியை கண் குளிரக் கண்டு பூரண மனநிறைவுடன் அங்கே வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்திராணி சிவா அவர்கள் சந்நிதியானுக்கு சாத்தப்பட்டு நிலத்தில் சிந்திய மலர்களை எடுக்க முடியாத அளவு தூரத்தில் இருந்தாலும் அவருடைய உறவு முறையில் உள்ள ஒருவர் அவ்வாறு நிலத்தில் சிந்திய ஒரு சிறிய மலரினை எடுத்து இந்திரா சிவாவிடம் வழங்குகின்றார். திருமதி இந்திரா சிவா எதிர்பாராத வகையில் சந்நிதியானுக்கு சாத்திய மலர் தனக்கும் கிடைத்தது அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. அது மட்டுமல்ல இரண்டு வருடங்கள் ஆலயத்திற்கு வரமுடியாத நிலையில் இரண்டு வருட இடைவெளிக்கு பின்பு இவ்வாறு சந்நிதியானுக்கு சாத்திய ஒரு மலரினை தனது தலையில் சூட்டுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்த தினால் அவருடைய உள்ளத்தில் பெரிய நிறைவும் ஏற்படுகிறது.

இவ்வாறான உளப்பூரிப்புடன் திருமதி இந்திரா அந்த மலரினை தலையில் சூட்ட ஆயத்தப்படுத்தவும் வயது முதிர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அம்மையார் அவருக்கு அருகில் வந்து சேரவும் நேரம் அங்கே கனகச்சிதமாக அமைந்திருந்தது. ஔவைப்பிராட்டியார் இவ்வாறுதான் இருந்திருப்பாரோ என்று கூறக்கூடிய தனித்துவமான ஒரு தோற்றப் பொலிவு நிறைந்தவராக அந்த வயது முதிர்ந்த அம்மையார் காணப்பட்டார். தள்ளாடும் வயது, சிறிது கூனிய உடல்வாகு, பொக்கைவாய், பொது நிறம், அளவான உயரம், கைகளில் இலேசான நடுக்கம். ஆம் திருமதி இந்திராவுக்கு அருகில் வந்து சேர்ந்த அந்த அம்மையாரின் தோற்றப் பொலிவு இவ்வாறுதான் காணப்பட்டது. தறுமிக்கு பொற்கிழி வழங்கப்பட விருந்த சமயத்தில் நக்கீரர் அதனை அவருக்கு கிடைக்கவிடாது எவ்வாறு தடுத்தாரோ அதேபோன்ற ஒரு சோதனையை இங்கே திருமதி இந்திராவிற்கும் அந்த ஔவைப்பிராட்டியார் போன்ற அந்த வயது முதிர்ந்த அம்மையார் அரங்கேற்றும் திருவிளை யாடல் இங்கே நடந்தேறியது.

தனது உறவினர் வழங்கிய அந்த மலரினை வாஞ்சையுடன் திருமதி இந்திரா தனது தலையில் சூடிக்கொள்ள முயற்சித்த பொழுது அவருக்கு அருகில் வந்துசேர்ந்த ஔவைப்பிராட்டி போன்ற வயது முதிர்ந்த அந்த அம்மையார் அந்த மலரினை இந்திராவை அவரது தலையில் சூடவிடாது தடுத்து அந்த மலரினை தன்னிடமே வழங்குமாறு கேட்டுக்கொண்டார்கள். இதனை சற்றும் எதிர்பாராத இந்திராவுக்கு இது மிகப்பெரிய சங்கடமான சூழ்நிலையை ஏற்படுத்தியது. இரண்டு வருட இடைவெளிக்கு பின்பு தான் ஆலயத்திற்குள் வந்துள்ளேன். அதுவும் சந்நிதியானது கொடியேற்ற உற்சவத்தின் ஆரம்ப நாளான இன்று சந்நிதியானுக்கு சாத்திய மலர் அதிஷ்டம் போல தனக்கு கிடைத்துள்ளது. அதனை கையில் எடுத்து தலையில் சூடிக் கொள்ளவும் ஆயத்தமாகிவிட்டேன். இந்த நிலையில் அதனை தனது தலையில் சூடாது இன்னொருவருக்கு வழங்குவதென்பது அவருக்கு பெரிய கவலையையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்துவ தாய் அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேநேரம் ஆலயத்திற்குள் அதுவும் ஆலய மூலஸ்தான முகப்பில் ஒரு வயது முதிர்ந்த அம்மையார் மலரினை கேட்கும்பொழுது அதனை அவருக்கு வழங்க மறுப்பதென்பதும் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயம் என்பதையும் திருமதி இந்திராணி உணர்ந்திருந்தார்கள். இவ்வாறான ஒரு தர்மசங்கடமான சூழ்நிலையை அங்கே இந்திரா ஆலயத்திற்குள் எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

இந்தநிலையில் பூவைப் பெற்றுக்கொள்ள விரும்பும் அந்த அம்மையாரின் மனநிலையில் ஏதாவது தளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா என தெரிந்துகொள்ளும் ஒரு நப்பாசை இந்திராவிற்கு ஏற்பட்டது. எனவே இந்திரா அந்த அம்மையாரை நோக்கி இது ஒரு சிறிய மலர் இதனையா நீங்கள் கேட்கிறீர்கள் என அந்த சிறிய மலரினை அம்மையாரிடம் காட்டி பக்குவமாக வினாவினார்கள். அதற்கு அந்த அம்மையார் ஆம் அதுதான் எனக்கு வேண்டும் என்று தனது விருப்பத்தை மீண்டும் உறுதிப்படுத்தி விட்டார்கள். இப்பொழுது இந்திராவுக்கு வேறு வழி தோன்றவில்லை. உள்ளத்தில் கவலை இருந்தாலும் அதனை வெளிக்காட்டாது அதே நேரம் சிறிது தயக்கத்துடன் அந்த மலரினை அம்மையாரிடம் வழங்கினார்கள்.

அப்பொழுது தனது பொக்கை வாயால் சிரித்தபடியே அந்த சிறிய மலரினை இந்திராவிடமிருந்து பெற்றுக்கொண்ட அந்த அம்மையார் அந்த மலரில் உள்ள சில இதழ்களை தான் பிய்த்து எடுத்துக்கொண்டு மிகுதி இதழ்களுடன் இருந்த அந்த மலரினை மீண்டும் இந்திராவிடமே வழங்கினார்கள்.

ஆம் அப்பொழுதுதான் திருமதி இந்திரா சிவாவினுடைய நெஞ்சை உறையவைக்கும் அந்த அற்புதம் அங்கே அரங்கேறியது. வயது முதிர்ந்த ஔவைப்பிராட்டி போன்ற தோற்றமுள்ள அந்த அம்மையார் தனது வலதுகைப் பெருவிரலை நிமிர்த்திக்காட்டியும் இந்திராவை நேருக்கு நேர் நிமிர்ந்து பார்த்தும் புன்முறுவலான தனது முகபாவனையை வெளிப்படுத்தியவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'நீ எனக்கு பூ கொண்டுவந்து தாறனி எல்லே'** என்று குறிப்பிட்டார்கள். இவ்வாறு அந்த வயது முதிர்ந்த அம்மையார் தனது உதடுகள் மூலம் வெளிப்படுத்திய அந்த ஒரு வசனம் இந்திராவுக்கு அதிசயமும் வியப்பும் நிறைந்ததாக மட்டுமல்லாது ஒருவித திகைப்பையும் அவருக்கு ஏற்படுத்திவிட்டது. அது மட்டுமல்லாது அந்த வசனத்தை ஜீரணிக்க முடியாத அவரது உடம்பின் மேற்பாகமும் தலையும் அவரை அறியாமலே சிறிது பின்னுக்கு சாயும் அளவுக்கு அந்த வசனம் அவரை அப்படியே உலுக்கிவிட்டது.

கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு மலர்களை வழங்கு கின்ற மெய்யடியார்கள் பலர் காணப்படுகின்றனர். ஆனால் இவ்வாறு சந்நிதியானுக்கு மலர்கள் வழங்குகின்ற இறை தொண்டையே தமது வாழ்க்கையின் மிக முக்கிய குறிக்கோளாகக் கருதி செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற குடும்பம்தான் திரு. திருமதி இந்திரா சிவா குடும்பமாகும். இவர்கள் சந்நிதியானுக்கென்றே தமது வீட்டில் காணப்படுகின்ற அந்த பெரிய முகப்பு நிலத்தில் பூங்கொல்லை அமைத்துள்ளனர். அங்கே மலரும் பலவிதமான வண்ணமான மலர்கள் முழுவதையும் சந்நிதியானுக்கே வழங்கி வருகின்றனர். அது மட்டுமல்ல அந்த மலர்களை தாங்களே பறித்து இருவருமே வேலைக்கு சென்று கொண்டிருக்கிற இயந்திரமயமான அந்த வாழ்க்கைச் சூழலிலும் தாங்களே நேரடியாக ஆலயத்திற்கு அவற்றை கொண்டுவந்து வழங்குவதி னூடாக பரிபூரண நிறைவும் பெற்றுவருகின்றனர். இவ்வாறான இறை தொண்டை சலிக்காது மிக நீண்ட காலத்திலிருந்து இன்றுவரை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர். ஆம் திரு. திருமதி இந்திரா சிவா குடும்பத்தினர் கனடாவில் வசந்த காலத்தில் மரங்கள் துளிர்விட்டு பின்பு பூக்கள் பூக்க ஆரம்பிக்கும் பொழுது பூக்கின்ற முதற்கட்ட பூக்கள் தொடக்கம் பின்பு இலையுதிர் காலத்தில் பூக்கள் நிறைவடையும் இறுதிக்கட்ட பூக்கள் வரை அனைத்தையும் தொடர்ச்சியாக சந்நிதியானுக்கே வழங்கி வருவது இவர்களது வழமையான செயற்பாடாகும். 2016 ஆம் ஆண்டு நவீன நுட்ப முறைகளைப் பயன்படுத்தி மேலும் சிறப்பாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவகையான மலர்களையும் உற்பத்தி செய்து சந்நிதியானுக்கு வழங்கும் செயற்பாட்டிலும் அவர்கள் ஈடுபட்டதும் குறிப்பிடத் தக்கது.

தான் எங்கேயும் என்றுமே சந்தித்திருக்காத ஒருவர் சந்நிதியானுடைய ஆலயத்திற்குள் அதுவும் சந்நிதியானுடைய மூலஸ்தானத்திற்கு முன்பாக நின்றுகொண்டு ''நீ எனக்கு பூ கொண்டுவந்து தாறனி எல்லே'' என்று கூறுவதானால் அந்த நிகழ்வு சாதாரண நிகழ்வோ சராசரி நிகழ்வோ அல்ல என்பதை அங்கே இந்திராணி உடனடியாகவே நன்கு உணர்ந்து கொண்டுள்ளார்கள். அதனை எம்மாலும் நன்கு உணர்ந்து கொள்ள முடிகிறது.

தமது குடும்பம் சந்நிதியானுக்கு புனிதமான மலர்களை வழங்கவேண்டுமென்பதற்காக பூங்கொல்லை அமைத்து சந்நிதியானுக்கு பூக்கள் வழங்கி வருவது உண்மைதான். சந்நிதியானுக்கு பூ எடுக்கின்ற பரம்பரையில் வந்த தாங்கள் தற்பொழுது கனடாவில் வாழ்ந்தாலும் இதனை தாங்கள் செய்ய வேண்டிய ஒரு வரலாற்றுக் கடமையாகவே அவர்கள் கருது கின்றனர். அதேநேரம் திரு. திருமதி இந்திராணி சிவா குடும்பம் இதனை உளப்பூர்வமாகவும் மானசீகமான உணர்வுடனுமே மேற்கொண்டு வருகின்றனர். இதனை ஒரு விடயப் பொருளாக எடுத்து அவர்களை எவருடனும் பகிர்ந்து கொண்டதில்லை. வேறு அடியவர்கள் இந்த குடும்பம் ஆலயத்திற்கு மலர்களை கொண்டுவந்து வழங்குவது தொடர்பாக உரையாடியதை நாமும் காணவில்லை. இந்த நிலையில் முன்பின் தெரியாத ஒருவர் விடயங்களை கிரகித்துக்கொள்ள முடியாத அளவுக்கு தள்ளாடும் முதுமைநிலையை அடைந்த ஒருவர் மூலஸ்தான முகப்பில் நின்று கொண்டு ''நீ எனக்கு பூ கொண்டு வந்து தாறனி எல்லே'' என்று கூறும் வசனத்தில் உள்ளடங்கியிருக்கும் கருப்பொருளையும் அதன் ஆழத்தையும் எம்மால் உணரமுடிகிறதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடாவில் சந்நிதியானுக்கு பூங்கொல்லை அமைத்து பூத்தொண்டு புரிந்துவரும் குடும்பத்தின் குடும்பத் தலைவர் திரு. சிவா அங்கப்பிரதட்சனை செய்துகொண்டிருப்பது தொடர்பான காட்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் என்றால் அது தெய்வம், சிலை என்றால் அது வெறும் சிலைதான்.... என்ற தத்துவப் பாடலை நாம் கேட்டிருக்கின்றோம். இங்கே ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் மூலஸ்தானத்திலிருக்கும் வெள்ளியிலான வேலை அது வெறும் வேல் அல்ல உண்மையான தெய்வம் என்று திரு. திருமதி இந்திரா சிவம் குடும்பம் முழுமையாக நம்பி செயற்பட்டுள்ளனர். ஆனால் சந்நிதியானோ தான் தெய்வம் மட்டுமல்ல ''பேசும் தெய்வம்'' என்பதையும் வெளிப்படுத்திவிட்டான்.

ஓம் முருகா!

## தூய்மையும் அருளும்

சந்நிதியானுக்கு பூசை செய்கின்ற பிரதான பூசகர்கள் தோய்த் துலர்ந்த ஆடை, உருத்திராக்க மாலை, மௌன பூசைக்கு பயன்படும் மூக்குத்துண்டு (வெள்ளை துணி) என்பவற்றை எல்லாம் ஓலைப் பெட்டிக்குள் வைத்து ஆலயத்திற்கு எடுத்து வருவார்கள். ஆலயத்தில் பூசை ஆரம்பிப்பதற்கு முன்பு மீண்டும் பிரதம பூசகர் ஆலயத்தில் நீராடி தோய்த்துலர்ந்த ஆடையை அணிந்து தம்மை மிகவும் தூய்மை யாக்கிய பின்பே பூசையை மேற்கொள்கின்றனர்.

இதேபோன்று மடப்பள்ளிக்குள் சந்நிதியானது பூசைக்குரிய நைவேத்தியம் தயாரிப்பதற்கென இன்னொரு பிரத்தியேக மடப்பள்ளி காணப்படுகிறது. அந்த பிரத்தியேக மடப்பள்ளிக்குள் பூசகர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். அங்கே பூசகர்களால் புனிதமாக தயாரிக்கப்படும் நைவேத்தியம் விஷேடமான முறையில் ஆலயத்திற்குள் எடுத்துச் செல்லப்பட்டு அறுபத்து ஐந்து ஆலம் இலை அமுது உட்பட முறைப் படியாக நைவேத்தியங்கள் அனைத்தும் படைக்கப்படுகின்றன. திருச்செந்தூர் ஆலயத்திலும் இது போன்ற தனித்துவமான தூய்மைகள் பின்பற்றப்படுவதை அங்கே காணமுடிகிறது.

சந்நிதியானது திருவருள் இங்கே நிறைவாகக் கிடைப்பதற்கு மருதர் கதிர்காமர் காலம் தொடக்கம் இங்கே பின்பற்றப்பட்டு வருகின்ற இவ்விதமான தூய்மையான செயற்பாடுகளே முக்கிய காரணமாக விளங்கி வருகிறது. தூய்மையுடன் நாமும் வழிபடும் பொழுது எமக்கு கிடைக்கும் ஆத்ம திருப்தியும் தனியானதென்பதை நாமே உணர்ந்துகொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் இரண்டு

கனடாவில் ரொரன்ரோ நகரில் ஸ்காபுறோ என்ற இடத்தில் அமைந்துள்ள கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் 2016ஆம் ஆண்டு வருடாந்த மகோற்சவம் வழமைபோல சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எல்லா திருவிழாக்களுக்கும் மகுடம் வைத்தாற் போல் 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ஆம் திகதி பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மிகவும் அழகான அந்த கொட்டகைக்குள் சந்நிதியானுடைய தீர்த்த உற்சவம் எல்லா வகையான சிறப்புக்களுடனும் அடியார்களின் பக்திப் பரவசமான சூழ்நிலையில் நடந்தேறிக் கொண்டிருக்கிறது.

தாயகத்தைப் போல தீர்த்தக் குளத்தில் எல்லா வகையான அபிஷேகத் திரவியங்களும் பிரமாண்டமான அளவில் பூசகர்களால் சந்நிதியானுக்கு சாத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவற்றை எல்லாம் செயற்படுத்துவதற்கு தொண்டர்கள் பக்தி சிரத்தையுடன் சுறுசுறுப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். விஷேடமாக அழைக்கப்பட்ட பத்துக்கு மேற்பட்ட நாதஸ்வர இசைக் குழுக்கள் அங்கே காணப்படுகின்ற அதேநேரம் பஜனைக் குழுவினாரால் ''ஆற்றங்கரை வேல் ஐயா அன்னதானக் கந்தையா பாலபிஷேகம் காண சந்நிதி வருவோம் முருகா! சந்நிதி வருவோம்....'' என்ற பாடல் பக்தி சிரத்தையுடன் கூட்டாக இசைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வாறு இவை எல்லாவற்றையும் உணர்வு பூர்வமாக உள்வாங்கிக் கொண்டிருக்கின்ற மெய்யடியார்களின் உள்ளத்தில் மேலோங்கிக் கொண்டிருக்கின்ற பக்திப் பரவசம் என அந்த சூழல் முழுவதுமே பக்தி மயமாகக் காட்சிதந்து கொண்டிருக்கிறது.

இப்பொழுது நேரம் பகல் 12.00 மணியை அண்மித்துக் கொண்டிருக்கிறது. தீர்த்தக் குளத்தில் தீர்த்தமாடுகின்ற செயற்பாடு எல்லா வகையான சிறப்புக்களுடனும் நிறைவு பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் எம்பெருமான் தீர்த்தமாடிய தீர்த்தக் குளத்தில் மங்களகரமாகவும் மிகவும் அழகாகவும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்து கொண்டிருந்த அந்த புனிதமான மலர்களை அடியவர்கள் அங்கே சென்று தமக்கு விரும்பிய மலர்களாகப் பார்த்து தாமே எடுத்துக் கொள்கின்றனர். முக்கியமாக பெண் அடியவர்கள் இவ்வாறான செயற்பாட்டில் அதிகம் ஈடுபட்டுக் கொண்டிருக் கின்றனர்.

தனது கணவருடனும் இரண்டு குழந்தைகளுடனும் குடும்பமாக வந்து கலந்துகொண்ட திரு. திருமதி றஜீவன் ஜீவகி குடும்பத்தினரும் சக அடியவர்களைப் போல பக்தியும் ஆனந்தமும் நிறைந்த சந்நிதியானது தீர்த்த உற்சவத்தில் பங்குகொண்டு முழு மனநிறைவுடன் காணப்படுகின்றனர். அது மட்டுமல்லா சந்நிதியானது தீர்த்த உற்சவத்தில் சிறப்பாகப் பாடப்படுகின்ற அந்த தீர்த்த உற்சவப் பாடலை பஜனைக் குழுவினருடன் சேர்ந்து பாடிய ஒரு மனநிறைவும் திருமதி ஜீவகி உள்ளத்தில் காணப்படுகிறது. இப்பொழுது எம்பெருமான் தீர்த்தம் ஆடிய தீர்த்தக் குளத்தில் மிதந்து கொண்டிருந்த அந்த புனிதமான மலர்களை ஏனைய அடியவர்கள் போல தானும் அங்கே சென்று எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற விருப்பம் அவருக்கு தோன்றுகிறது. இவ்வாறு தனக்கென ஒரு மலரினை தானே எடுப்பதற்கு தீர்த்தக் குளத்தடிக்கு சென்ற திருமதி ஜீவகிக்கு அவர் அவ்வாறு தானே மலரினை எடுப்பதற்கு முன்பே அங்கே மிதந்து கொண்டிருந்த அழகான ஒரு நாவல் நிற மலர் அவரின் கைகளில் கிடைத்துவிடுகிறது.

ஆம் அங்கே தீர்த்தக் குளத்தடியில் காணப்பட்ட ஒரு நடுத்தர வயதைத் தாண்டிய ஒரு அன்பர் ஜீவகி தீர்த்தக் குளத்திலிருந்து மலரினை எடுக்க முயற்சிப்பதற்கு முன்பே குளத்திலிருந்து ஒரு மலரினை எடுத்து திருமதி ஜீவகிக்கு வழங்கிவிடுகின்றார். இது ஒவ்வொரு சராசரி அடியவர் வாழ்விலும் அன்றாடம் இயல்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்வுதான். இவ்வாறு இயல்பாக நிகழ்வுகள் நடைபெறுகின்ற பொழுதுதான் சந்நிதியானும் அவர்கள் எதிர்பார்க்காத வகையில் எதிர்பாராத அற்புத லீலைகளை நடாத்தி விடுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு நடைபெற்ற அந்த நிகழ்ச்சிதான் திருமதி ஜீவகி அவர்களின் உடலையும் உள்ளத்தையும் அப்படியே ஒரு கணம் உறைய வைத்துவிட்ட விடயமாக அவருக்கு அமைந்துவிட்டது. அது மட்டுமல்ல கலியுகத்தில் சராசரி மனிதர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மானிடர்களுக்கு இறையியல் சார்ந்த இது போன்ற சம்பவங்களும் நடைபெறுகின்றனவா என்ற வியப்பும் ஆனந்தமும் அவருக்கு ஏற்பட்டது. அத்துடன் இந்த மானிட வாழ்வில் நாம் எவ்வளவு துன்பங்கள் துயரங்களை அனுபவித்தாலும் சந்நிதியான் இவ்வளவு அற்புதங்களையும் ஆனந்தத்தையும் எமக்கு ஏற்படுத்துகின்றபொழுது இந்த மானிடப் பிறப்பு எவ்வளவு சிறப்பானது, புனிதமானது என்பதை தனது உணர்வுகள் மூலம் ஜீவகி அடியேனுடன் பகிர்ந்துகொண்டார்கள்.

தீர்த்தக்குளத்தருகில் நின்று அந்த மலரினை வழங்கிய நிகழ்வு ஒரு சாதாரண நிகழ்வாக இடம்பெறவில்லை. நாவல் நிறமுடைய அந்த பெரிய டாலியாஸ் மலரினை அந்தப் பெரியவர் திருமதி ஜீவகியிடம் வழங்கும்பொழுது அச்சொட்டாக ஒரு வார்த்தையைக் கூறித்தான் அந்த மலரினை வழங்கினார். ஆம் அவர் அதை வழங்கும்பொழுது,

**''இந்தாருங்கள் இந்த மலரினை வள்ளி அம்மன்தான் தந்தவ''**

எனக் கூறித்தான் அந்த மலரினை ஜீவகியிடம் வழங்கியுள்ளார். வள்ளி அம்மன்தான் தந்தவ என்ற வார்த்தை தொடர்பான விடயம் ஒரு சாதாரண விடயமும் அல்ல. அது ஒரு சாதாரண வார்த்தையும் அல்ல. வள்ளி அம்மன் என்ற தெய்வத்தின் பெயர் திரு. திருமதி றஜீவன் ஜீவகி ஆகிய இருவரின் உள்ளங்களிலும் இரண்டறக் கலந்துவிட்ட ஒரு உணர்வின் உச்சமான விடயப் பொருளாகும்.

திரு. திருமதி றஜீவன் ஜீவகி குடும்பத்தினர் சந்நிதியானது ஆலயத்தில் குடிகொண்டிருக்கின்ற வள்ளி அம்மனை உள்ளம் உருகி வழிபடுவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். ஏற்கனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி அம்மன் கனவுகள் காட்சிகள் மூலம் இவர்களை தனது மெய்யடியவர்களாக்கி பல திருவிளையாடல்களை இவர்களது வாழ்க்கையில் நடாத்திக் கொண்டிருக்கிறார்.

கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வருடாவருடம் இடம்பெற்றுவரும் வள்ளி அம்மன் திருக்கல்யாண நிகழ்வின் உபயம் உட்பட வள்ளி அம்மன் தொடர்பாக இவர்கள் மேற்கொண்டு வருகின்ற ஈடுபாடுகள் மிகவும் மகத்தானவை. வள்ளி அம்மன் சந்நிதானத்தை சுத்தமாக பேணுதல், வள்ளி அம்மன் திருவாசி மற்றும் வள்ளி அம்மன் தொடர்பான ஆடை அலங்காரங்கள், வள்ளி அம்மன் தொடர்பான பூசைச் செயற்பாடுகள், வள்ளி அம்மன் சந்நிதியில் மாவிளக்கு ஏற்றுதல், வள்ளி அம்மன் திருப்பணிச் செயற்பாடுகள் என அவர்கள் வள்ளி அம்மன் தொடர்பாக மேற்கொண்டு வருகின்ற ஈடுபாடுகள் மிகவும் மகத்தானவை. உண்மையில் வள்ளி அம்மனுடன் அந்த குடும்பம் கொண்டுள்ள அந்த ஆழமான ஈடுபாடு அவர்களுக்கும் வள்ளி அம்மனுக்கும் மட்டுமே வெளிச்சமானது. அவற்றை நாம் வார்த்தைகளால் விபரிக்க இயலாதது. மானிட வாழ்வின் மிக உச்சமான பக்தியின் வெளிப்பாடான கைங்கரியங்களாக அவை விளங்குகின்றன.

இதேபோன்று இதுவரை கண்டோ கதைத்தோ பழகியோ இருக்காத ஒருவர் அந்த மலரினை திருமதி ஜீவகிக்கு வழங்கி இந்தாருங்கள் இந்த மலரினை வள்ளி அம்மன்தான் தந்தவ என்று கூறிய கூற்றின் தாற்பரியத்தையும் மானிட நிலையில் நின்று எம்மால் விளக்குவதும் இயலாத காரியமாகும்.

சந்நிதியான் கனவுகள் காட்சிகளினூடாகவும் பூசகர்கள் வடிவிலும் அடியார்களுக்கு பலவிதமான திருவிளையாடல்களை நிகழ்த்தி வருவது நாம் அறிந்த நிகழ்வுகளே. அது மட்டுமன்றி தேவை ஏற்படும்பொழுது மருதர் கதிர்காமருக்கு வாக்களித்தபடி தைப்பூசம், வைகாசி விசாகம், சூரன் போர் போன்ற முக்கிய தினங்களிலும் வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்த உற்சவம் உட்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட உற்சவ நாட்களிலும் தானே மனித உருவில் வந்து தேவையான திருவிளையாடல்களை நிகழ்த்திச் செல்லும் சம்பவங்களும் இன்றும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இவை வெறும் வெற்று வார்த்தைகள் அல்ல. அவை நிஜமான நிகழ்வுகளாகும். இரத்தினச் சுருக்கமாகக் கூறுவதானால் சந்நிதியான் சாதாரண தெய்வம் அல்ல சந்நிதியான் கண்கண்ட தெய்வம்.

பக்குவமுள்ள முருகேசு சுவாமிகள் போன்ற அருளாளர்கள் சந்நிதியான் இவ்வாறு உற்சவ காலங்களில் மானிட உருவம் தாங்கி வருகின்ற இவ்வாறான நிகழ்வுகளை பல சந்தர்ப்பங்களில் எதிர்கொண்டு அவற்றை உள்வாங்கிக் கொண்டது மட்டுமன்றி பக்குவமாக அவற்றை எமக்கும் வெளிப்படுத்தியுமுள்ளனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சராசரி அடியவர்கள் சந்நிதி யானின் இவ்வாறான திருவிளையாடல்கள் நடந்தேறி விட்ட பின்புதான் அதன் தார்ப்பரியத்தை புரிந்துகொள்கின்றனர். அதன் பின்னர்தான் சம்பவங்களை மீட்டுப்பார்த்து சந்நிதியானின் திருவிளையாடல்களை தாமே உணர்ந்து பக்திப்பரவசமடைந்து சந்நிதியானின் திருப்பாதங்களுக்கு தம்மை அடிமையாக்கிக் கொள்கின்றனர்.

இங்கே திரு. திருமதி றஜீவன் குடும்பத்தினர் சந்நிதி யானுக்கும் அங்கே தனியான சந்நிதானத்தில் குடிகொண்டிருக்கும் வள்ளி அம்மனுக்கும் ஏற்கனவே தம்மை முழுமையாக அடிமையாக்கிக் கொண்டாவர்கள். இதனால்போலும் இந்தாருங்கள் இந்த மலரினை வள்ளி அம்மன்தான் தந்தது என்று அந்த அன்பர் கூறி அந்த மலரினை ஜீவகிக்கு வழங்கும் பொழுதே மின்சாரம் பாய்ந்தது போல உடனடியாகவே இது சந்நிதியான் நடாத்துகின்ற திருவிளையாடல்தான் என்பதை ஜீவகியால் நன்கு உணர்ந்து கொள்ள முடிந்துள்ளது. ஆனால் உள்ளத்தை உறையவைக்கும் இவ்வாறான ஒரு அற்புதத்தையும் அதிசயத்தை யும் சந்நிதியான் தனது சந்நிதானத்தில் ஏற்படுத்திய ஆனந்த பரவசத்திலிருந்து ஜீவகி விடுபடுவதற்கு நீண்டநேரம் பிடித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிகழ்வின் அடுத்த கட்ட சம்பவத்தையும் இங்கே சந்நிதியான் அடியவர்களுக்கு பயபக்தியுடன் வெளிப்படுத்து கின்றோம். திரு. திருமதி றஜீவன் ஜீவகி ஆகிய இருவரும் வள்ளி அம்மன் மீது மிக ஆழமான பக்தி கொண்டவர்கள் என்பதை அடியேன் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். ஆனால் இவர்களில் ஒப்பீட்டளவில் யார் மிகமிக ஆழமான பக்தி உள்ளவர் என்று நாம் ஒருவேளை வாதிட்டால் அது ஜீவகியின் கணவர் திரு. றஜீவன் அவர்களே என்பது அங்கே வெளிப்படும்.



வள்ளி திருமண நிகழ்வில் மங்கலப் பொருட்களை திருமதி
ற. ஜீவகி உட்பட அடியவர்கள் எடுத்துவரும் காட்சி

திருமதி ஜீவகி தீர்த்தக் குளத்தடியில் தனக்கு ஏற்பட்ட அற்புத நிகழ்விலிருந்தும் ஆனந்த பரவசத்திலிருந்தும் ஒருவாறு மீண்டு தீர்த்தக் கொட்டகைக்குள் தனது பிள்ளைகளும் கணவரும் தங்கிநின்ற இடத்தை வந்தடைந்தார். அங்கே தனது கணவருக்கு ஆனந்த பரவசத்துடன் நடந்தேறிய அற்புத நிகழ்வை வெளிப் படுத்தியுள்ளார். நடைபெற்ற அற்புத நிகழ்வை உள்வாங்கிக்



289487
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
14039CC

கொண்ட திரு. றஜீவன் அவர்கள் உள்ளம் உருகி ஆனந்தக் கண்ணீர் சிந்தலானார். அது மட்டுமல்ல பக்தி மேலீட்டினால் வள்ளி அம்மனை தரிசிப்பதற்கு அவரது உள்ளத்தில் உந்துதல் ஏற்பட்டுக் கொண்டிருந்துள்ளது. இதனால் றஜீவன் உடனடியாகவே தீர்த்தக் கொட்டகையிலிருந்து ஆலயத்திற்குள் சென்று அங்கே வள்ளி அம்மன் சந்நிதானத்தை அடைந்துள்ளார்.

என்ன அதிசயம்.... என்ன அற்புதம்.... அங்கே அவர் கண்ட காட்சியையும் அவருக்கு ஏற்பட்ட பக்தி உணர்வையும் நாம் எப்படி விபரிக்க முடியும். இந்தாருங்கள் இந்த மலரினை வள்ளி அம்மன் தந்தவ என்று அந்த அன்பர் அவரது மனைவிக்கு கூறி வழங்கியது போன்ற இன்னொரு நாவல்நிற பெரிய டாலியாஸ் மலர் வள்ளி அம்மன் திருக்கரங்களில் காட்சி தந்து கொண்டிருந்தது.

ஆம் சந்நிதியான் அன்னதானக் கந்தனாகவும் அடியவர்கள் துன்பங்களைப் போக்கும் கலியுகக் கந்தனாகவும் மட்டுமல்ல அவன் தினம் தினம் அடியவர்களுக்கு அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கும் அற்புதக் கந்தனாகவும் விளங்குகின்றான்.

அற்புதங்கள் நாயன்மார்கள் காலத்துடன் முற்றுப்பெற வில்லை. நாயன்மார்களைப் போல மெய்யான பக்தியுடன் தூய்மையான தொண்டு செய்து தூய்மையான வழிபாடு செய்து வருகின்ற இவர்களைப் போன்றவர்களுக்கு அற்புதங்கள் இன்றும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன என்பதை நாம் நன்கு உணரமுடிகின்றதல்லவா?

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. றஜீவனுக்கு ஆனந்த பரவசத்தை ஏற்படுத்துவதற்காக
திருமதி ஜீவகிக்கு வழங்கப்பட்டது போன்ற அதேவிதமான இன்னொரு ஜீனியாஸ் மலரை
வள்ளி அம்மன் தனது திருக்கரத்தில் தாங்கி நிற்கும் காட்சி



திருமதி ற. ஜீவகி தனக்கு கிடைத்த நாவல்நிற ஜீனியாஸ் மலரை
தற்பொழுதும் தனது வீட்டு சாமித்தட்டில் பேணிவரும் ஆனந்தமான காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் மூன்று

சந்நிதியில் வழிபட வருகின்ற அடியார்கள் பலவிதம். அதே போல அருளாளர்களும் பலவிதம். கைதடிச்சாமியார் ஆரம்ப காலங்களில் போத்தல்களை தனது தலையில் அடித்து சுக்குநூறாக்கிய செயற்பாடுகளை நாம் காணமுடிந்தது. தற்பொழுது இரும்புக் கம்பியினால் அடித்து தனது உடலை வருத்துதல் போன்ற அசாதாரண செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதையும் பிரதி வெள்ளிதோறும் அடியார்கள் அங்கே காணமுடியும். இவைகளெல்லாம் அவரது தனித்துவமான இயல்புகளாகும்.

இவருடைய பெயர் ஆறுமுகம் சிவஞானம். கைதடி கிழக்கு கைதடி என்பது அவருடைய நிரந்தர விலாசமாகும். சந்நிதியில் தற்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அருளாளர்களுள் இவரும் முக்கியமானவராவர். இவர் ஞானநிலையில் பெற்றுள்ள பக்குவம், அனுபவம் என்பவற்றை ஏனையவர்கள் அதிகம் அறிந்திருப்பதற்கு வாய்ப்பு இல்லை. ஆனால் ஒரு சித்தராக அல்லது அருளாளராக அவரிடம் இயல்பாக இருக்கவேண்டிய அருள்நிலை சார்ந்த பண்புகள் ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை அவரிடம் வெளிப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. இது தொடர்பாக மிக அண்மையில் நடைபெற்ற இரண்டு அற்புத நிகழ்வுகளை இங்கே அடியார்களுக்கு வெளிப்படுத்துவது பொருத்தமானது.

## I

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் ஆரம்ப கால வரலாறே புனித பூவரசு மரத்துடன் தொடர்புபட்டதாகவுள்ளது. இவ்வாறான வரலாற்றுச் சிறப்பும் புனிதமும் நிறைந்த சந்நிதியானது தல விருட்சமான பூவரசு மரத்தினை இன்றும் அடியார்கள் பய பக்தியுடன் வணங்கிவருவதை நாம் இங்கே காணமுடியும். முருகேசு சுவாமிகள் காலத்தில் அவரால் ஒரு இளம் யுவதிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்ட இந்த புனித பூவரசு மரத்தின் காய்ந்த பூவரசம் இலை 10 ரூபா தாளாக மாறிய அற்புதமும் ஒரு சந்தர்ப்பத்தில் நடந்தேறியது.

இவ்வாறு பலவகையிலும் புனிதமும் அற்புதங்களும் நிறைந்த இந்த புனித பூவரசு மரத்தில் கடந்த பல வருடங்களாக பட்டுத் துண்டுகள், மஞ்சள் துணியினால் சுற்றப்பட்ட நாணயக் குத்திகள், பல வகைப்பட்ட வேல்கள், பல்வகைப்பட்ட அளவுடைய தொட்டில்கள், வேளைகள் (நூல்கள்) என பலவகைப்பட்ட பொருட்களையும் அடியார்கள் புனித பூவரசு மரத்தின் மேல் கட்டி வருவதால் அந்த புனித பூவரசு மரத்தின் பெரும்பகுதி மறைக்கப்பட்டிருந்ததையும் அடியார்கள் அவதானிக்கலாம். அது மட்டுமல்ல பட்டுக்கள் கட்டப்பட்டிருந்த இந்த புனித பூவரசு மரத்தின் இடுக்குகளில் சில அடியார்கள் சிட்டி விளக்குகளை வைத்து அங்கே தீபங்களையும் ஏற்றியுள்ளனர். இதனால் பட்டுத் துணிகளில் தீபம் பற்றி பெரும் ஆபத்துக்கள் ஏற்படுகின்ற சூழ்நிலைகளும் ஏற்பட்டுள்ளன. இவ்வித செயற்பாடுகள் எல்லாம் ஏறத்தாழ கடந்த 15 வருடங்களுக்கு உட்பட்ட காலத்திலேயே இடம்பெற்று வந்துள்ளதையும் அடியார்கள் அவதானித்திருக்கலாம். இவ்விதமான செயற்பாடுகள் எல்லாம் பொதுவாக நேர்த்திச் செயற்பாடுகளுக்காக ஒருவரைப் பின்பற்றி இன்னொருவர் என அடியவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த செயற்பாடுகளினால் ஏற்பட்ட விளைவுகளாகும்.

ஆனால் புனிதமான தல விருட்சத்தை பயபக்தியுடன் தொட்டு வணங்கி வழிபடுகின்ற அடியவர்கள், புனித பூவரசு மரத்தின் கீழ் இருந்து தியான நிலை வழிபாடு செய்யும் அடியவர்கள் இதன் புனிதத்தை அனுபவத்தால் உணர்ந்து கொண்டவர்கள் என பலருக்கும் தல விருட்சமான பூவரசு மரத்தில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்விதமான பல்வேறு நடவடிக்கைகள் கவலையையும் சங்கடத்தையும் ஏற்படுத்தி வந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலம் தவறாது சந்நிதியானிடம் வந்து செல்லுகின்ற கைதடிச் சாமியாருக்கு புனிதமான தல விருட்சமான பூவரசு மரத்தில் பல வகைப்பட்ட இவ்வித பொருட்கள் கட்டப்பட்டிருப்பதும் அவை எல்லைமீறி அளவுக்கதிகமாகக் கட்டப்பட்டு அதன் புனிதத்திற்கு மாசு ஏற்பட்டுக் கொண்டிருப்பதும் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தி வந்துள்ளது. இந்த பூவரசு மரம் இயல்பாக இருந்த காலத்தில் அதன் சிறப்பையும் புனிதத்தையும் நன்கு விளங்கிக் கொண்டவர் கைதடிச் சாமிகள். அதேபோல தற்பொழுது பூவரசு மரம் மறைக்கப்படும் அளவுக்கு அதன் புனிதத்திற்கு களங்கம் ஏற்பட்டிருப்பதையும் நேரடியாக உணர்ந்து அதனை மிகுந்த கவலையுடன் உள்வாங்கிக் கொண்டிருப்பவர்களில் ஒருவர் கைதடிச் சாமியார்.

ஆம் ஆன்மீக ரீதியாக புனித பூவரசு மரத்தின் வரலாற்றுச் சிறப்பையும் அது இயல்பாக இருந்த காலத்தில் அதில் வெளிப்பட்ட புனிதத்தையும் தற்பொழுது உள்ள கவலைதரும் நிலமைகளையும் நன்கு விளங்கிக்கொண்டு எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்த கைதடிச்சுவாமிகளின் உள்ளத்தில் அது இயல்பாக இருப்பதே சிறந்தது என்ற உணர்வு மேலோங்கிக் கொண்டிருந்தது. இவ்வாறான உணர்வு நீண்ட காலமாக அவரது உள்ளத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தாலும் புனித பூவரசு மரத்தில் கட்டப்பட்டிருப்பவை அனைத்தையும் அகற்றி அதனை இயல்பாக இருந்த நிலைக்கு கொண்டுவரும் செயற்பாட்டை சந்நிதியில் நடைமுறைப்படுத்துவதென்பது சாதாரண விடயம் அல்ல என்பதையும் அவர் நன்கு தெரிந்து வைத்திருந்தார்.

இந்த நிலையில்தான் சந்நிதியில் அந்த அற்புத நிகழ்வு அரங்கேறியது. 2017ஆம் ஆண்டு மாசி மாதம் இறுதிப் பகுதியில் ஒரு வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் கைதடிச் சாமிகள் புனித பூவரசு மரத்திற்கு அண்மையில் சிறிது ஓய்வாக தியான நிலையில் காணப்படுகின்றார்கள். அப்பொழுது அவரை அறியாமலே அவரது உள்ளத்தில் ஒரு அருள் உணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகிறது. புனித பூவரசு மரத்திலிருந்து இந்த பொருட்கள் அனைத்தும் அகற்றப்பட்டு அது ஆரம்ப காலத்தில் இருந்தது போன்ற புனிதமான பூவரசாக இங்கே காட்சி தரவேண்டும் என்று திடமாக முடிவு எடுத்துக்கொள்கின்றார்கள். அது மட்டுமல்ல இன்னும் மூன்று நாட்களுக்குள் அந்தக் காட்சி இங்கே தென்பட வேண்டும் என்றும் அவரது உள்ளத்தில் அவர் முடிவு செய்தார்கள்.

இவ்வாறான ஒரு அருள்நிலை உந்துதலில் அவர் காணப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது கைதடிச்சாமிகளுடன் அவ்வப்பொழுது ஆன்மீக உரையாடலில் ஈடுபடுகின்ற சந்நிதியானது சில அடியவர்கள் அங்கே வந்து சேர்ந்தார்கள். குடைச்சாமிகளுக்கு தொண்டுகள் செய்து அவரை தனது வாகனத்தில் ஏற்றிச் செல்கின்ற செயற்பாடுகளில் ஈடுபட்ட இணுவில் பகுதியைச் சேர்ந்த பகீரதன் என்ற அன்பர், மற்றும் நெல்லியடியில் உதிரிப்பாகக் கடை வைத்திருக்கின்ற சண்முகவசிகரன் என்ற அன்பர் இவர்களுடன் ஒரு வைத்தியரின் மகன் என மூன்று அடியவர்கள் அங்கே வந்து சேர்ந்தனர். கைதடிச் சாமியார் தன்னுடன் இயல்பாகப் பழகும் இந்த மூன்று அடியவர்களுடனும் புனித பூவரசு மரம் தொடர்பாக நீண்ட காலமாக தனது உள்ளத்தில் எழுந்து கொண்டிருக்கும் உள்ளத்து உணர்வுகளை பகிர்ந்து கொண்டார்கள். அத்துடன், **"இன்னும் மூன்று நாட்களுக்குள் சந்நிதியான் இந்த பூவரசு மரத்திலிருந்து இவற்றை எல்லாம் நீக்குவதற்கு எனக்கு வரம் தரவேண்டும்"** இது நான் சந்நிதியானிடம் கேட்கும் வரம் என தனது இயல்பான பாணியில் அந்த மூன்று அடியவர்களுக்கும் எடுத்துக்கூறினார்கள்.

என்ன அதிசயம் அவர் சந்நிதியானிடம் இவ்வாறான ஒரு வரத்தைக் கேட்டு இரண்டாம் நாளே அந்த பூவரசு மரத்திலிருந்த அனைத்துப் பொருட்களும் அங்கிருந்து அகற்றப்பட்டுவிட்டன. புதுப்பொலிவுடன் உள்ளத்தில் தெளிவான உணர்வையும் பக்தியையும் வெளிப்படுத்தும் புனிதமான தல விருட்சமாக அது அங்கே காட்சி தந்து கொண்டிருந்தது. ஆம்! அருளாளர்கள் வாக்கு எப்பொழுதும் பொய்ப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தொடர்பாக திருப்பணிச்சபையினருடனும் பிரதம பூசகர்களுடனும் தொடர்பு கொண்ட பொழுது தாங்கள்தான் அவற்றை எல்லாம் அகற்றினோம் என அடியேனிடம் தெரிவித்தார்கள். மேலும் தங்களுக்கும் இவற்றை எல்லாம் அகற்ற வேண்டும் என்ற உணர்வு இருந்துவந்தாலும் அவற்றை எல்லாம் இவ்வாறு அகற்றுவதற்கு இப்பொழுதுதான் சந்நிதியான் திருவுள்ளம் கொண்டுள்ளான் போலும். எனவேதான் அவற்றை இப்பொழுது நாம் அகற்றினோம் எனவும் எடுத்துக்கூறினர்.

17.03.2017 வெள்ளிக்கிழமை பகல் ஆலயத்தில் கைதடிச் சாமியாரைச் சந்தித்து இது பற்றி பக்குவமாக அவருடன் உரையாடினேன். அப்பொழுது அவர்,

*''வேண்டத் தக்கது அறிவோய் நீ!*
*வேண்ட, முழுவதும் தருவோய் நீ!*
*வேண்டும் அயன், மாற்கு, அரியோய் நீ!*
*வேண்டி என்னைப் பணிகொண்டாய்;*
*வேண்டி, நீ யாது அருள் செய்தாய்?*
*யானும் அதுவே வேண்டின் அல்லால்,*
*வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்,*
*அதுவும் உன்தன் விருப்பு அன்றே!*

என்ற திருவாசகப் பாடலை அடியேனுக்கு பாடிக் காண்பித்தார்கள். நான் எதையும் நானாக கூறவும் இல்லை கேட்கவும் இல்லை. சந்நிதியான் எனது உள்ளத்தில் புகுந்து அவனே அவனது விருப்பத்தை கேட்கவைத்து அவனே செயற்படுத்தி தனது திருவிளையாடல்களை நடாத்தி வருகின்றார். எல்லாம் சிவமயம் என வழமையான பாணியில் தனது ஆன்மிகக் கருத்துக்களை அடியேனுக்கு வெளிப்படுத்தினார்கள்.

குறிப்பு : புனித பூவரசு மரத்தில் அடியார்கள் மீண்டும் இவ்வாறான பொருட்களை வழமைபோல கட்ட ஆரம்பித்திருப்பதை அங்கே அடியார்கள் காணமுடியும். ஆனாலும் திருப்பணிச் சபையினர் இதற்கான மாற்று ஏற்பாடுகளை பக்குவமாக மேற்கொள்ள உள்ளதையும் அறியமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II

திருமதி பத்மராஜன் பரிமளாதேவியின் சொந்த இடம் தென்மராட்சியாக இருந்தாலும் சந்நிதியானுக்கு தொண்டுகள் செய்து தினமும் சந்நிதியானை வழிபடுவதற்காக தற்பொழுது சந்நிதிச் சூழலில் வாழ்ந்து வருகின்றார். இவரைப் போல ஆலயச் சூழலிலும் ஆலயத்திலும் தங்கியிருக்கின்ற பல பெண் அடியவர்கள் ஆலய வெளிவீதி, ஆலய உள்வீதி என்பவற்றை எல்லாம் தினமும் கூட்டி துப்பரவு செய்யும் தொண்டுகளை மேற்கொண்டு வருவது அங்கே இயல்பாக நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளாகும்.

சில மாதங்களுக்கு முன்பு திருமதி பத்மராஜன் அவர்கள் ஆலய வெளிவீதியை கூட்டித் துப்பரவு செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது கைதடிச்சாமிகள் அங்கே வந்துள்ளார். அவர் அந்த அம்மையாரைப் பார்த்து நீங்கள் இந்த வேலையை இவ்வளவு நாளும் செய்தது போதும். **இதற்கு மேல் கூட்டித் துப்பரவு செய்யும் வேலையில் ஈடுபடாதீர்கள்** எனக் கூறியுள்ளார். கைதடிச்சாமியார் கூறிய விடயத்தை அந்த அம்மையார் உள்வாங்கிக் கொண்டாலும் தான் கூட்டித் துப்பரவு செய்யும் தொண்டினை அவர் நிறுத்தவில்லை. ஒரு சில வாரங்களின் பின் அவருக்கு உடல் முழுவதும் ஒவ்வாமை நோய் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமல்ல அதனால் மிக மோசமான வேதனையையும் அந்த அம்மையார் அனுபவித்துள்ளார். இறுதியாக கைதடியில் உள்ள ஆயுள்வேத வைத்தியசாலைக்கு சென்று அங்கே 45 நாட்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்று தற்பொழுது வீடு திரும்பியுள்ளார். தற்பொழுதும் அந்த நோயின் தாக்கம் அவருக்கு காணப்படுகிறது. அதற்காக மருந்தும் எடுத்துக் கொண்டிருக்கிறார்.

இந்த வருடம் மாசி மாதம் ஆலயச் சூழலில் அமைந்துள்ள இந்த அம்மையாரின் வீட்டிற்கு அடியேன் சென்றபொழுது அவருடன் ஆறுதலாக உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது தனக்கு ஏற்பட்டுள்ள ஒவ்வாமை நோய் பற்றியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிடம் எடுத்துக் கூறினார். அந்தச் சந்தர்ப்பத்தில் தான் கைதடிச் சாமியார் தனக்கு ஆலய வீதியில் வைத்து கூறிய கூற்றை அடியேனுக்கு தானாகவே வெளிப்படுத்தினார்கள். அவர் கூறிய கூற்றை அப்பொழுதுதான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் தனக்கு நடக்க இருந்ததை அவர் முன்பே நன்கு தெரிந்து கொண்டுள்ளார். கைதடிச் சாமியார் தனக்கு கூறிய கூற்று சாதாரண கூற்று அல்ல. அது அருள்வாக்கு. இதனை தான் தற்பொழுது நன்கு உணர்ந்துகொள்வதாக பய பக்தியுடன் அந்த அம்மையார் அடியேனுக்கு எடுத்துக்கூறினார்கள்.

சந்நிதி புனிதமானது. சந்நிதியானது ஆலயச் சூழலும் புனிதமானது. அங்கே காணப்படுகின்ற அருளாளர்களும் புனிதமானவர்களே!

ஓம் முருகா!

## தீமை செய்யாதிருப்பதற்கு

போட்டி, பொறாமை, வஞ்சகம், சூது, நம்பிக்கைத் துரோகம், நன்றி மறத்தல்.... போன்றவை நாம் வாழுகின்ற கலியுகத்தில் மலிந்து காணப்படுவதால் தர்ம நெறியில் வாழ்பவர்கள் கூட பாவங்களை செய்யும் துர்ப்பாக்கிய நிலைக்கு சிலவேளை செல்வதைப் பார்க்கின்றோம். இவ்வாறு நாம் மேலும் பாவங்களை செய்து எமது பாவங்களின் எண்ணிக்கையை அதிகரிக்காது இருப்பதற்கு ஒரே ஒரு மார்க்கம் மட்டுமே உள்ளது.

நமக்கு பிறர் செய்யும் தீமைகளை இறைவனிடம் சமர்ப்பித்து விட்டு தீமை செய்தவரை மனதார மன்னித்துவிடுவது. இவ்வாறு செயற்பட்டு நாமும் தீமை செய்யாது, தீமை செய்தவரையும் மேலும் தீமை செய்யும் பாவத்திலிருந்தும் மீட்டு விடலாமே.

நாம் செய்யும் பாவத்தை தவிர்த்தால் உலகின் மொத்த பாவங்களையும் குறைத்த புண்ணியத்தையும் செய்தவராவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் நான்கு

திருமதி வைத்தியலிங்கம்பிள்ளை தெய்வநாயகி அம்மா அவர்கள் 6 மாத சிசு ஒன்றை தனது வயிற்றில் தாங்கிய வண்ணம் வழமைபோல தனது வீட்டில் அன்றாட வேலைகளில் இயல்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சிறிது ஆறுதலாக இருந்தவேளை குழந்தை பிறக்கப்போகும் நிகழ்வினை அவர் மனம் சிந்தித்த வேளை இயல்பாகவே ஏனைய பெண் களுக்கும் ஏற்படுவது போன்ற அளவில்லாத மகிழ்ச்சி தாயாகப் போகும் திருமதி வைத்தியலிங்கம் அவர்களுக்கும் ஏற்பட்டது. ஆனாலும் நொடிப்பொழுதில் அந்த மகிழ்ச்சியான சிந்தனை சிதைவடைந்து மனதில் கவலை குடிகொள்ளத் தொடங்கியது. காரணம் முன்பு இரண்டு தடவைகள் இதேபோன்று தான் கருவுற்றிருந்தாலும் இரண்டு தடவைகளும் குழந்தை குறைப் பிரசவமாக இறந்து பிறந்த சம்பவங்கள் அவர் மனக்கண் முன்னே நிழலாடியது.

இவ்வாறான ஒரு குழப்பமான உணர்ச்சிச் சூழலிலும் உள்ளத் தவிப்புடனும் திருமதி தெ. வைத்தியலிங்கம்பிள்ளை அவர்கள் வல்வெட்டித்துறையிலுள்ள உடையார் மணல் என்ற விலாசத்தில் உள்ள தமது வீட்டு மண்டபத்தில் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது ஒளி வீசுகின்ற முகத்துடன் காவி உடை அணிந்த ஒரு சாமியார் வீட்டுவாசற் கதவைத் திறந்தவாறு உள்ளே நுழைவதைக் கண்டார். குழப்பமான மனநிலையில் இருந்த திருமதி வைத்தியலிங்கம்பிள்ளை அவர்களுக்கு எதிர்பாராதவகையில் தனது வீட்டிற்கு சாமியார் ஒருவர் வருவதைக் கண்டதும் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டதுமட்டுமன்றி அது ஒரு நல்ல சகுனம் போலவும் அவருக்குத் தெரிந்தது.

வீட்டிற்குள் வருகைதந்த சாமியாரை திருமதி வைத்திய லிங்கம்பிள்ளை அவர்கள் அன்புடன் வரவேற்றார்கள். சாமியார் திருமதி வைத்தியலிங்கம்பிள்ளையைப் பார்த்து **"உங்களுக்கு சுகப்பிரசவமாக ஆண் குழந்தை பிறக்கும். அந்தக்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைக்கு வேலும்மயிலும் என்ற நாமத்தை சூட்டுமாறும்" குறிப்பிட்டார்கள். அத்துடன் அக் குழந்தையின் வாழ்க்கை பிற்காலத்தில் பிரகாசமாக இருக்குமெனவும் அருள்வாக்கு ஒன்றை தெரிவித்தார்கள். அத்துடன் திருமதி வைத்தியலிங்கம்பிள்ளை அவர்களை ஆசீர்வாதம் செய்வதற்கும் சாமியார் தவறவில்லை.

தான் இந்தியாவிலிருந்து வந்ததாகத் தெரிவித்த அந்தச் சாமியார் குறிப்பிட்டது போல திருமதி வைத்தியலிங்கம்பிள்ளை அவர்களுக்கு சுகப்பிரசவமாக ஆண்குழந்தை பிறந்தது. குழந்தைக்கு வை. வேலும்மயிலும் எனவும் பெயர் வைக்கப்பட்டது. பெயருக்கு ஏற்றாற்போல குழந்தை சந்நிதியான் மேல் அளவற்ற பக்தியுடனும் வளரத் தொடங்கியது.

பாடசாலையில் கல்வி கற்கும் பொழுதே ஏனைய மாணவர்களின் கவனத்தை ஈர்க்கின்ற தனித்துவமான திறமையுடன் வளர்ந்து வந்த வை. வேலும்மயிலும் அவர்கள் படிப்பு முடிந்து அரசாங்க உத்தியோகத்திலும் இணைந்துகொண்டார்.

அரசாங்க சேவையில் இணைந்த வை. வேலும்மயிலும் அவர்கள் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சைக்கு இரண்டு தடவைகள் தோற்றி இரண்டு முறையும் சித்தியடைந்தார்கள். இவ்வாறு எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தாலும் நேர்முகப் பரீட்சையில் இரண்டு தடவைகளும் தெரிவுசெய்யப்பட முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டது.

தனது திறமையிலும் ஆற்றலிலும் பூரண நம்பிக்கையும் அதேநேரம் இறைபக்தியும் உள்ள வை. வேலும்மயிலும் அவர்கள் தான் இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட முடியாத நிலைமை ஏற்பட்டதற்காக பெரிதும் கவலையடைந்தார்கள்.

1973 ஆம் ஆண்டு மூன்றாவது தடவையும் இலங்கை நிர்வாக சேவையின் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய திரு. வேலும் மயிலும் அவர்கள் அதில் சித்தியடைந்துவிட்டார். மூன்றாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவையும் நேர்முகப் பரீட்சைக்கு செல்லவேண்டிய நாளும் வந்தது.

திரு. வை. வேலும்மயிலும் அவர்கள் தனது குலதெய்வமான சந்நிதியானிடம் சென்று அவனை மெய்யுருகி வழிபட்டார்கள். அவ்வாறு வழிபடும் பொழுது சந்நிதியானை ஒரு தெய்வமாக அல்லாது தனக்கு மிகவும் வேண்டிய, தன்னுடன் மிகவும் நெருங்கிப் பழகுகின்ற மானிட நிலையிலுள்ள ஒருவராகவே அவரது உள்ளம் பாவனை செய்தது.

திரு. வை. வேலும்மயிலும் அவர்கள் அவ்வாறான உரிமையுடன் சந்நிதியானை வழிபட்டதனால் போலும் ஒரு சபதத்தை சந்நிதியான் வாசலில் நின்று தனது மனதிற்குள் எடுத்துக் கொண்டார்கள்.

**''இந்த வருடம் இந்த நேர்முகப் பரீட்சையில் நான் தெரிவு செய்யப்படாவிட்டால் இந்த ஆலயத்திற்கு இனிமேல் நான் வரமாட்டேன்''** என்பதுதான் அந்த சபதம்.

இதன்பின் அவர் அன்று நடைபெற்ற குறிப்பிட்ட நேர்முகப் பரீட்சைக்கும் சமூகமளித்த பின் வீடு திரும்பிவிட்டார்.

வீடு திரும்பிய வேலும்மயிலும் இயல்பான மனநிலையில் நின்று சிந்தித்தார்கள். அப்பொழுது தான்செய்த காரியம் அதாவது சந்நிதியான் வாசலில் சபதம் செய்தது எவ்வளவு பாரதூரமான செயல் என்பதை உணர்ந்து கொண்டார்கள். இவ்வாறு செயற்படுவது சராசரி மனிதர்கள் எவருமே செய்யக்கூடாத செயல் மட்டுமல்ல எவ்வளவு முட்டாள்தனமான செயல் என்பதையும் உணரத் தலைப்பட்டார்கள்.

இவருடைய நெருங்கிய உறவினரும் அப்பொழுது பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்டவருமான திரு. க. துரைரத்தினம் அவர்களுடன் உரையாடும்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. வை. வேலும்மயிலும் அவர்கள் நடந்த சம்பவத்தை அவரிடம் தயக்கத்துடன் தெரிவித்தார்கள்.

சந்நிதியான் கலியுகக் கந்தன் அல்லவா அவனிடம் அன்பையும் ஆழமான பக்தியையும் அல்லவா நீ செலுத்த வேண்டும்? அதற்கு மாறாக இவ்வாறு சபதம் செய்வதற்கு யாராவது துணிவார்களா? என்று சந்நிதியான் தொடர்பான தன்னுடைய அனுபவங்கள் பலவற்றைச் சொல்லி அவர் செய்தது தவறு என்பதை திரு. க. துரைரத்தினம் அவர்கள் திரு. வேலும்மயிலுவுக்குச் சுட்டிக் காட்டினார்கள்.

திரு. வை. வேலும்மயிலும் அவர்களுக்கு தான் செய்த தவறின் தாக்கம் இப்பொழுது நன்கு புரிந்தது. தினமும் தான் செய்த தவறிற்காக கவலைப்பட்டதுடன் தன்னையே நொந்து கொண்டார்கள். அது மட்டுமல்ல இந்தத் தடவையும் நேர்முகப் பரீட்சையில் தான் சித்தியடையாத நிலை ஏற்பட்டால் அதனால் ஏற்படப் போகும் விபரீதங்களை நினைத்தபொழுது அவருடைய தலையே வெடித்துவிடும் போலிருந்தது.

இவ்வாறான குழப்பத்துடன் இருந்தபொழுது ஒரு நாள் நேர்முகப் பரீட்சையின் முடிபு தொடர்பான கடிதம் வந்து சேர்ந்தது. சந்நிதியானைத் தியானித்த வண்ணம் கடிதத்தை திறந்தார்கள். அதில் சித்தியடைந்த 13 பேர்களின் பெயர்கள் இடம்பெற்றிருந்தன. திரு. வை. வேலும்மயிலும் அவர்களின் பெயர் இறுதிப் பெயராக இடம்பெற்றிருந்தது மட்டுமன்றி ஒரே ஒரு தமிழரின் பெயராகவும் அங்கே இடம்பெற்றிருந்தது. கலியுகக்கந்தன் தன்மேல் காட்டிய கருணையை நினைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்த திரு. வை. வேலும்மயிலும் அவர்கள் இவ்வுலக வாழ்க்கையில் இறையருள் என்பதே உண்மையானது. உயர்வானது. வாழ்க்கைக்கு இறுதி நேரத்தில் எமக்கெல்லாம் உதவக்கூடியது என்பதை முழுமையாக உணர்ந்து கொண்டார்கள்.

289487



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. வை. வேலும்மயிலும் அவர்கள் நிர்வாக சேவையில் மிகவும் திறமையுடன் கடமையாற்றியது மட்டுமன்றி இன, மொழி, மத வேறுபாடுகளை எல்லாம் கடந்து மக்கள் சேவையே மகேசன் சேவை என கடமையாற்றும் ஒரு பண்பாளன் என்பதை தனது வாழ்க்கையின் முன்மாதிரியால் அனைவருக்கும் வெளிப்படுத்திய ஒரு பெருந்தகை.



ஆலயத்திலிருந்து ஆச்சிரமத்திற்குள் திரு. வேலும்மயிலு அவர்கள் அழைத்துவரப்படும் காட்சி - 2004

இதனால் இலங்கையின் மிக உயர்மட்ட அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்றதுடன் நாட்டின் மிக உயர்ந்த தலைவரான ஜனாதிபதி அவர்களே சில உயர்நிலை நிர்வாகப் பொறுப்புக் களையும் சில பொது வேலைத்திட்டங்களையும் இவரிடம் நேரடியாகக் கையளிக்கும் அளவுக்கு திறமையும் முக்கியத் துவமும் பிரபல்யமும் உடையவராக வாழ்ந்துள்ளார்கள். தற்பொழுது ஓய்வுநிலையில் கருணைக்கடலான சந்நிதியானின் நினைவுடன் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

எல்லாம் அவன் அருளாலே தான் நடக்கமுடியும், நடக் கின்றன என்று பலரும் பல சந்தர்ப்பங்களிலே கூறக் கேள்விப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருக்கின்றோம். ஆம் எல்லாம் அவன் அருளாலேதான் நடக்கின்றன என்பதன் பூரண அர்த்தத்தை கருணைக் கடலான சந்நிதியானின் திருவிளையாடல் மூலமும் இங்கே வேலும்மயிலும் அவர்களின் வாழ்க்கைப் பயணத்திலிருந்தும் எம்மால் உணரமுடிகின்றது அல்லவா.



ஞானபண்டித சேவாஜோதி என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட வேலும்மயிலும் அவர்கள் மேடையில் அமர்ந்திருக்கிறார்கள். அவருடன் ஆசியுரை வழங்குவதற்கு வருகைதந்த நல்லை ஆதீன முதல்வரும் வல்வை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவும் காணப்படுகின்றனர்.

மக்களுக்கு மகத்தான சேவையை வழங்கிய வேலும்மயிலும் அவர்கள் ஓய்வுபெறும்வரை மற்றவர்கள் தனக்கு வழங்க முன்வந்த எந்தவொரு பாராட்டு நிகழ்விலும் பங்குபற்றாது அவற்றை நிராகரித்தே வந்துள்ளார். ஆனாலும் சந்நிதியில் 2004 ஆம் ஆண்டு பேரவையால் வழங்கப்பட்ட பாராட்டு நிகழ்வில் பங்குபற்றி நாங்கள் வழங்கிய ஞானபண்டித சேவாஜோதி விருதினையும் பெற்றுக்கொண்டார்கள்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஐந்து

சந்நிதியில் நித்தியபூசை இடம்பெறும் பொழுது நிறைவாக பூசை நடைபெறுவது சந்நிதி ஆலயத்தின் வடக்குத் திசையில் சரஸ்வதியை மூலமாகக் கொண்டு அமைந்திருக்கும் சிறிய சந்நிதிதானம் என்பதை யாவரும் அறிவர். பொதுவாக தமது நேர்த்திக்காக காவடி, பாற்செம்பு எடுப்பவர்கள் அந்த இடத்திலிருந்தே அதனை ஆரம்பிப்பது வழக்கம். ஆண்டியப்பர் பூசையும் அந்த இடத்திலேயே வருடாவருடம் இடம்பெற்று வருகிறது.

இவ்வாறு தனியாக அமைந்திருக்கும் அந்தக் கட்டிடத் தொகுதி முழுவதும் தற்பொழுது புனரமைக்கப்பட்டு மிக நீண்ட கட்டிடமாக அது அமைந்திருப்பதை ஆலயத்திற்கு செல்லுகின்ற அடியார்கள் அவதானிக்க முடியும்.

ஆலயத்திற்கு வடக்காக அமைந்திருக்கும் இந்த சரஸ்வதி சந்நிதிதானம் 2004 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் புனரமைக்கப் பட்ட பொழுது இதனை புனரமைப்பதில் காத்திரமான பங்களிப்பு வழங்கியவர்கள் இரண்டு ஆசிரியர்களாவர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் திரு. து. கணேசமூர்த்தியும் வசாவிளான் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய திரு. செ. பரமேஸ்வரன் ஆகிய இருவரும் அந்த ஆசிரியர்களாவார். இவர்கள் சரஸ்வதி குடிகொண்டிருக்கும் மூலஸ்தானம், சரஸ்வதி சிலை ஆகியவற்றை அமைப்பதில் தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர். மண்டப வேலைகளை திருப்பணிச் சபையினர் தொடர்ந்து செயற்படுத்தியுள்ளனர். இவ்வாறு மேற்படி சரஸ்வதியை மூலமாகக் கொண்டு அமைந்திருக்கும் கட்டிடத் தொகுதியை புனரமைப்புச் செய்வதற்கான நிதி சேகரிப்புக்கு இருவரும் வவுனியா செல்வதற்கு திட்டமிட்டனர். இதற்கிணங்க 2004ஆம் ஆண்டு நடுப்பகுதியளவில் திரு. து. கணேசமூர்த்தி ஆசிரியர் மல்லாகத்திலிருந்தும் திரு. செ. பரமேஸ்வரன் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னாலைக்கட்டுவனிலிருந்தும் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை சென்றடைந்தனர்.

இவர்கள் புறப்பட்ட தினம் ஒரு சனிக்கிழமை ஆகும். அன்றைய தினம் தனியார் பேரூந்து சேவையை நடாத்தியவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். இ.போ.ச. பேரூந்துக்கள் மட்டும் சேவையில் ஈடுபட்டன. அவைகளும் க.பொ.த (உ.த) வகுப்பு பரீட்சை நடைபெற்றமையால் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டியிருந்ததால் சாதாரண பிரயாணிகளாக சென்றிருந்த இரண்டு ஆசிரியர்களும் மிகுந்த சிரமத்தின் மத்தியிலே யாழ்ப்பாண பஸ் நிலையத்தைச் சென்றடைந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து தொடர்ந்து முகமாலைக்கு பயணஞ் செய்ய வேண்டிய செயற்பாட்டிலும் இத்தகைய ஒரு அவலத்தையே தாம் எதிர்நோக்கிக் கொண்டிருப்பதை இருவரும் நன்கு உணர்ந்து கொண்டனர். ஆனாலும் எவ்வளவு கஸ்டம் வந்தாலும் இது சந்நிதியானது இறை தொண்டுக்குரிய ஒரு செயற்பாடு என்பதால் ஏற்கனவே தீர்மானித்ததற்கிணங்க எப்படியும் பிரயாணத்தை தொடர்வதற்கு இருவரும் முடிவு செய்தனர். அப்பொழுது டிப்போவிலிருந்து முகமாலைக்கு பிரயாணிகளை ஏற்றுகின்ற இ.போ.ச. பேரூந்து ஒன்று பஸ் தரிப்பிடத்திற்கு வந்து சேர்ந்தது.

இந்நிலையில் திரு. பரமேஸ்வரன் ஆசிரியர் தனது கையில் இருந்த பிரயாணப் பையைப் பேரூந்தில் முன்வரிசையில் இருந்த சீற்றில் (இருக்கையில்) கண்ணாடியால் எட்டி வைப்பதற்கு பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது பேரூந்துக்குள் நின்று 13 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் அந்தப் பையை வாங்கி அவர் எதிர்பார்த்த அந்த சீற்றில் வைப்பதற்கு உதவி செய்ததனால் ஆசிரியருக்கு பெரிய நிம்மதி ஏற்பட்டது.

இதன் பின் திரு. பரமேஸ்வரன் ஆசிரியரும் திரு. கணேசமூர்த்தி ஆசிரியரும் பஸ்நடத்துனரிடம் முகமாலைக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணச்சீட்டைப் பெற்றுக்கொண்டு பேரூந்தின் முன் சீற்றைச் சென்றடைந்தனர். அங்கே திரு. பரமேஸ்வரன் ஆசிரியர் எதிர்பார்த்துச் சென்றது போலவே முன் சீற்றின் ஒரு இடத்தில் அந்தச் சிறுவன் இருந்து கொண்டு மற்றப் பகுதியை பரமேஸ்வரன் ஆசிரியர் இருப்பதற்காக வழங்கினான். நன்றிப்பெருக்குடன் அந்த இடத்தில் அமர்ந்து கொண்ட திரு. பரமேஸ்வரன் ஆசிரியர் தனது நண்பன் கணேசமூர்த்தி ஆசிரியரைப் பார்த்து ஒரு இடம் கிடைத்துவிட்டது. ஒவ்வொருத்தராக முகமாலை வரைக்கும் மாறிமாறி இருந்து போகலாமென தனது உணர்வினை வெளிப்படுத்தினார். அப்பொழுது அந்தச் சிறுவன் அவர்களைப் பார்த்து ''ஒருவர் மட்டுமல்ல நீங்கள் இருவருமே இருந்து போகலாம்'' எனக் கூறியது மட்டுமன்றி தான் இருந்த இடத்தை ஆசிரியர் திரு. கணேச மூர்த்திக்கே வழங்கிவிட்டான். இவ்வாறு அந்தச் சிறுவன் செயற் பட்ட அசாதாரண நிகழ்வினால் இரு ஆசிரியர்களுமே அளவில்லாத மகிழ்ச்சியடைந்தனர்.

திரு. பரமேஸ்வரன் ஆசிரியர் நன்றிப்பெருக்குடன் அந்தச் சிறுவனை நோக்கி தம்பி எங்கே செல்கின்றாய் என்று வினாவைத் தொடுத்தார். சுட்டிப் பையன் போன்று காட்சியளித்த அந்தப் பையன் அதற்கு உடனே பதில் கூறாது அதே கேள்வியை இவர்களிடமே திருப்பிக் கேட்டான். ஆசிரியர் இருவரும் தாம் நிதி சேகரிப்பதற்காகச் செல்கின்றோம் என்ற உண்மையை வெளிப்படுத்தினர். அதன் பின்பு அந்தப் பையனும் தானும் பணம் சேகரிக்கத்தான் செல்கின்றேன் என்று பதில் கூறினான்.

குங்கும நிற வேட்டி அணிந்திருந்த அந்தச் சிறுவனிடம் ஒரு திருநீற்றுத் தட்டும் ஆலயம் தொடர்பான சில துண்டுப் பிரசுரங்களும் இருந்ததை இருவரும் அவதானித்தனர். அது மட்டுமல்ல ஆசிரியர் கணேசமூர்த்தி அவர்கள் 10 ரூபாவை அந்தப் பையனிடம் அன்பளிப்பாகவும் வழங்கினார்கள். இதன்பின் அந்தச் சிறுவன் அவர்களிடம் விடைபெற்று பின்கதவால் இறங்கிச் சென்றதையும் இவர்கள் அவதானித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பிரயாணத்தின் பொழுது இருந்த சிக்கல்கள் கஸ்டங்கள் நீங்கியது மட்டுமன்றி அதிசயமான அனுபவங்களுடன் இருவரும் வவுனியா சென்றடைந்தனர். ஆனாலும் வவுனியாவில் மீண்டும் இவர்களுக்கு ஏமாற்றம் காத்திருந்தது.

சந்நிதி வசந்தம் - 3 என்ற ஒலிநாடாவை விற்பனை செய்து நிதி சேகரிப்பதே இவர்களது நோக்கமாக இருந்தது. இதற்கு வசதியாக வவுனியாவில் உள்ள ஸ்ரீ என்ற தமது நண்பனிடம் இவற்றை விற்றுத்தரும்படி ஏற்கனவே வழங்கியிருந்தனர். இப்பொழுது இவர்கள் ஸ்ரீ என்ற அந்த அன்பரிடம் சென்றபொழுது ஒலிநாடா எதுவும் விற்பனை செய்யப்படவுமில்லை நிதி எதுவும் சேகரிக்கப்படவுமில்லை என்பதை அறிந்த நிலையில்தான் இந்த ஏமாற்றமும் கவலையும் இருவருக்கும் ஏற்பட்டது.

இந்த நிலையில் திரு. கணேசமூர்த்தி ஆசிரியர் நாம் காலையில் ஆரம்பித்த பயணத்தில் சந்நிதியான் வழிகாட்டியது போன்று இங்கே நிதி சேகரிப்பிலும் சந்நிதியான் எமக்கு வழிகாட்டுவான் என்று தனது நண்பன் பரமேஸ்வரனுக்கு கூறி அவருக்கு ஏற்பட்ட மனத்தளர்வை போக்கியது மட்டுமன்றி தனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்யையும் மனதிற்குள் சமாளித்துக்கொண்டார். ஆனாலும் இருவருமாக ஏதோ ஒரு நம்பிக்கை உணர்வுடன் செயற்பட ஆரம்பித்தனர்.

முதலில் வவுனியா தோணிக்கல்லில் இருக்கும் இவர்களது உறவினர் திருமதி தம்பிராசா வீட்டிற்கும் பின்பு மாவடியான் கிறேசர் சல்லி விற்பனை உரிமையாளர் போன்றோரிடம் சென்ற பொழுது அவர்கள் கணிசமான நிதியை வழங்கினார்கள். அது மட்டுமல்ல வேறும் பலரிடம் சென்று ஒலிநாடாவை விற்று நிதி சேகரிப்பதற்கு இவர்கள் உணர்வுபூர்வமாக வழிகாட்டியது ஆசிரியர் இருவருக்கும் மிகுந்த உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் வழங்கியது. ஏறத்தாழ 17000 ரூபா நிதியை குறுகிய கால இடைவெளியில் அவர்களால் அந்தக் காலகட்டத்திலும் சேகரிக்க முடிந்தது. சந்நிதியானிடம் ஆழமான பக்தியும் சந்நிதியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சிரமத்துடன் நெருங்கிய தொடர்பும் கொண்டுள்ள மேற்படி இரு ஆசிரியர்களும் நடந்து முடிந்த நிகழ்வின் அற்புதத் தன்மையை ஆச்சிரமத்தின் சுவாமிகளிடமும் அடியேனிடமும் விபரமாக எடுத்துக் கூறினார்கள்.



ஆலய மூலஸ்தான முகப்பில் கேடயம் ஒன்றுடன் துரை கணேசமூர்த்தி ஆசிரியரும் செ. பரமேஸ்வரன் ஆசிரியரும் அருகில் விரிவுரையாளர் அ. குமாரவேலு அவர்களும் காணப்படும் காட்சி

பயணம் தொடர்பாகத் தமக்கு உதவிய சிறுவன் தொடர்பான அந்த அற்புத அனுபவத்தை பயபக்தியுடனேயே எம்முடன் பகிர்ந்து கொண்டனர். பேரூந்தின் முன் பக்க கதவு பூட்டியிருந்த நிலையில் அதற்குள் வேறு யாரும் காணப்படாத நிலையில் இந்த சிறுவன் மட்டும் எப்படி அதற்குள் இருக்கமுடிந்தது. அத்துடன் அவன் நடந்து கொண்ட முறையும் தம்முடன் செய்த உரையாடல்களும் சாதாரணமானவை அல்ல என்பதையும் எமக்கு எடுத்துக் கூறினர். பணம் சேகரிப்பதற்காக செல்கின்றேன் என்று கூறியவன் பேரூந்திற்குள் பணம் சேகரிக்கவுமில்லை பயணத்தைத் தொடரவுமில்லை என்பதை எல்லாம் இப்பொழுது மீட்டுப் பார்க்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதுதான நடந்து முடிந்த சம்பவங்களின் அற்புதங்களை தம்மால் உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருப்பதை அடக்கத் துடன் வெளிப்படுத்தினார்கள்.

உள்ளத் தூய்மையுடன் சந்நிதியில் ஆரம்பிக்கப்படுகின்ற எந்தக் காரியமும் சிறப்பாகவும் அதேநேரம் சிரமமின்றியும் இடம்பெற்று முற்றுப் பெறுவதையே நாம் தினமும் இங்கே காண்கின்றோம். இதேபோன்றுதான் இந்த இரண்டு ஆசிரியர்களின் தூய்மையான செயற்பாட்டிலும் சந்நிதியான் தன் கடைக்கண் பார்வையைச் செலுத்தி தனது திருவிளையாடல்களை இங்கே நிகழ்த்தியிருக்கின்றான்.

திரு. து. கணேசமூர்த்தி அவர்கள் தற்பொழுதும் வட்டக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். திரு. செ. பரமேஸ்வரன் அவர்கள் யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமை யாற்றிக் கொண்டிருக்கின்றார். இந்த இரண்டு ஆசிரியர்களும் சந்நிதியானுடைய பெருமைகளையும் சிறப்புக்களையும் உள்ளடக்கிய சந்நிதி வசந்தம் ஒலி நாடாக்களை தொடர்ந்தும் வெளியீடு செய்து வரும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆறு

திரு. செல்லக்கண்டு சின்னராசாவுக்கு வயது 65. பிறந்து வளர்ந்து குடியிருந்த இடம் தொண்டைமானாறு. 1996 ஆம் ஆண்டு இப் பகுதியில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் புலப்பெயர்வு களுடன் பல்வேறு இடங்களில் புலம்பெயர்ந்து வாழ்ந்து பின்பு மடத்தடி, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை என்ற விலாசத்தில் குடியிருந்தார்கள். சந்நிதியானை குலதெய்வமாக வணங்கும் பரம்பரையில் பிறந்தமையால் இயல்பாகவே சந்நிதியானிடம் ஈடுபாடும் அளவில்லாத பக்தியும் அவரிடம் காணப்பட்டது.

திரு. செ. சின்னராசா அவர்களது சிந்தனையும் செயற்பாடு களும் பெரும்பாலும் இரண்டு விடயங்களுக்குள் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஒன்று தன்னுடைய தொழில், இன்னொன்று தனது குடும்பம். இந்த இரண்டு விடயங்கள் தொடர்பாக அன்றாடம் தனது கடமைகளை நிறைவேற்றுகின்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதே அவரது வழமையாகும். மேற்படி கடமைகள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் எல்லாம் தமது குலதெய்வமான சந்நிதியானைத் தியானிப்பதும் அவனது திருவிளையாடல்களைச் சிந்திப்பதும் அவனுக்குத் தொண்டுகள் செய்வதும் மற்றும் உற்சவ காலங்களில் கரகம், காவடி எடுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுதல் போன்றவற்றிலேயே இவருடைய காலம் முழுவதும் ஓடிக் கொண்டிருந்தது.

இவருடன் பழகுகின்ற பல அன்பர்கள், இவரது ஊரைச் சேர்ந்த அன்பர்கள். பலர் காலத்திற்குக் காலம் கதிர்காமத்திற்குச் சென்று கதிர்காமக் கந்தனை வழிபட்டு வந்தபொழுதிலும் திரு. செ. சின்னராசா அவர்களுக்கு கதிர்காமக்கந்தனிடம் செல்ல வேண்டுமென்ற விருப்பமோ நாட்டமோ பெரிதாக ஏற்படவில்லை.

எங்களுக்கு அருகாமையிலேயே சந்நிதி முருகன் குடியிருக்கின்றான். அவனை வழிபடுகின்ற பொழுதே எங்களது உள்ளம் அமைதியும் திருப்தியும் அடைகின்றது. எமக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகின்ற துன்பங்களைப் போக்கி நிறைவான வாழ்க்கையை எமக்கு அவன் வழங்கிக் கொண்டிருக்கின்றான். இதுவே எனக்குப் பூரண திருப்தியாக இருக்கின்றது என இவர் ஏனையவர்களுக்குக் கூறிக்கொள்வார்.

இப்படிப்பட்ட இயல்புள்ள திரு. செ. சின்னராசா அவர்கள் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நித்திரையால் எழும்பியவர் மிகவும் உற்சாகமாகவும் மகிழ்ச்சியுடனும் காணப்பட்டார். தனது மனைவி மற்றும் பிள்ளைகளை அழைத்து தான் கதிர்காம யாத்திரையை முடித்துவிட்டு வந்துள்ளதாக அவர்களுக்கு கூறத் தொடங்கினார்.

அவர்கள் அனைவரும் சிரித்துவிட்டனர். நேற்று வரைக்கும் தங்களுடன் இயல்பாக இருந்தவர். நேற்று இரவு தங்களுடனேயே உணவு உண்டு இரவு தங்களுடனே நித்திரைக்கு சென்றவர் கதிர்காம யாத்திரையை முடித்துவிட்டு வந்துள்ளேன் என்று இன்று காலை இப்பொழுது கூறுவதாக இருந்தால் யார் தான் சிரிக்க மாட்டார்கள். ஆம் இவ்வாறு அவர்கள் சிரித்தது உண்மையில் யதார்த்தமானதே.

ஆனால் திரு. செ. சின்னராசா அவர்களோ இவர்களது சிரிப்பை பொருட்படுத்தவில்லை. தான் கதிர்காம யாத்திரையை திருப்தியுடன் நிறைவு செய்தது பற்றியும் அங்கே நடைபெற்ற சம்பவங்கள் பற்றியும் ஒவ்வொன்றாக எடுத்துக்கூறத் தொடங்கினார். கதிர்காமத்திற்கு மினி பஸ்சில் பிரயாணம் செய்தமை அங்கே பார்த்த கட்டிடங்கள், காட்சிகள், கதிர்காமத்தின் சூழல் தொடர்பான விபரங்கள், பூசை நடைபெற்ற முறைகள், பூசையை நடாத்திய கப்புறாளைகள் பற்றிய தகவல்கள் என ஒவ்வொன்றாக அவர் களுக்கு எடுத்து விளக்கமளித்தார்கள்.

வீட்டில் உள்ள அவரது மனைவி, மகள், பேரப்பிள்ளைகள் என அனைவரும் அதிசயமும் ஆச்சரியமுமடைந்தனர். ஆரம்பத்தில் சிரித்தவர்கள் இப்பொழுது சிந்திக்கத் தொடங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னார்கள். திரு. செ. சின்னராசா அவர்கள் கதிர்காம யாத்திரையை உண்மையாக மேற்கொள்ளவில்லை. அவர் தங்களுடனேயே தொடர்ந்து இருக்கின்றார் என்பது அவர்களுக்கு நன்கு தெரிகின்றது. ஆனால் அவர் யாத்திரையை முடித்ததற்குரிய முழுமையான சம்பவங்களையும் காட்சிகளையும் எந்தவிதமான தடுமாற்றமுமில்லாது கூறுவது இவர்களுக்கு மிகப் பெரிய வியப்பாகவே இருந்தது.



திரு. செ. சின்னராசா தனது குடும்பத்தினருடன் காணப்படும் காட்சி

இறுதியாக கதிர்காம யாத்திரைக்குப் பல தடவைகள் சென்று வந்த தொண்டைமானாற்றைச் சேர்ந்த இரத்தினசிகாமணி (குட்டிக்கிளி) என்ற அன்பரை வீட்டுக்கு அழைத்தனர். திரு. செ. சின்னராசா அவர்கள் கூறிய விடயங்களையும் சம்பவங் களையும் காட்சிகளையும் பூசை முறைகள் என்பவற்றை எல்லாம் திரு. இரத்தினசிகாமணி அவர்களிடம் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டார்கள். திரு. செ. சின்னராசா அவர்கள் கூறியது அனைத்துமே உண்மையான விடயங்கள் என்பதை இப்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் புரிந்து கொண்டனர். அத்துடன் ஆற்றங்கரை வேலவன் சந்நிதியானின் திருவிளையாடலையும் அனைவரும் உணர்ந்து கொண்டனர். காசோ, களைப்போ எதுவுமே இல்லாமல் கனவிலே கதிர்காமக் கந்தனை வழிபட்டு நிஜமான யாத்திரையை செய்தமைக்கான திருப்தி ஏற்பட்ட விந்தையை எண்ணி அனைவரும் வியப்படைந்தனர்.

ஏற்கனவே மேற்படி சம்பவத்தை மேலோட்டமாக அடியேன் அறிந்திருந்தாலும் மீண்டும் அவர்களது வீட்டிற்கு சென்று அடியேன் உரையாடியபொழுது திரு. செ. சின்னராசா அவர்கள் மேற்படி சம்பவத்துடன் மேலும் பல சம்பவங்களை எடுத்துக் கூறியதுடன் சந்நிதியானுடைய அற்புதங்களையும் கண்ணீர் மல்கப் பாடிக் காண்பித்தார்கள்.

சந்நிதியின் முதற் பூசகர் மருதர் கதிர்காமரை அவரது கண்களை மூடச் செய்து கதிர்காமத்திற்கு அழைத்துச் சென்று அங்கே நடைபெறும் பூசை முறைகள் போன்றவற்றைக் காண்பித்து, சந்நிதியில் வைத்து வணங்குவதற்காக வெள்ளியிலான வேலையும் வழங்கிய வள்ளல் அல்லவா? அன்று மருதர் கதிர்காமருக்கு ஆரம்பித்த அவ்வாறான திருவிளையாடல்கள் சந்நிதியில் இன்றும் தொடர்ந்தும் இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றன என்பதற்கு செ. சின்னராசா அவர்களது அனுபவம் எமக்கு நல்ல உதாரணமாக இருப்பதை நாம் இங்கே உணர முடிகின்றதல்லவா?

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஏழு

கைதடிச் சாமியார் உடலை வருத்திச் சில செயற்பாடுகளைச் செய்வது மட்டுமன்றி தனது அன்றாட உணவு முறைகளிலும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி தனது பக்குவநிலையை மேம்படுத்தி வாழ்ந்து கொண்டிருக்கிறார். அத்துடன் ஆழமான சமயக் கருத்துக்களையும் தத்துவங்களையும் தன்னுடன் மிக நெருக்கமாகப் பழகும் அன்பர்களுடனும் மெய்யடியவர்களுடனும் பகிர்ந்து அவர்களை எல்லாம் நல்வழிப்படுத்துவதையும் நாம் காணமுடியும்.

சராசரி அடியவர்களைப் போலவே அருளாளர்களுக்கும் சோதனைகள் வேதனைகள் ஏற்படுவதை நாம் அவர்களது வாழ்க்கை வரலாறுகளில் இருந்து காணமுடிகிறது. இதற்கு கைதடிச் சாமிகளும் விதிவிலக்கல்ல. அடியார்களுக்கோ அருளாளர்களுக்கோ இவ்விதமான சோதனைகள் வேதனைகள் ஏற்படும்பொழுது இறுதியில் தன் திருவிளையாடல் மூலம் தனது கருணையை வெளிப்படுத்தி அவர்களுக்கு அபயமளிப்பதற்கும் அவன் தவறுவதில்லை. இவ்வாறு கருணைகாட்டி அவர்களை ஆனந்தக் கண்ணீர் சொரிய வைப்பதிலும் சந்நிதியானுக்கு நிகர் சந்நிதியானே. கைதடிச் சாமிகளுக்கு ஏற்பட்ட இது தொடர்பான ஒரு நிகழ்வை இங்கே அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

வழமை போல கைதடிச் சாமியார் 2004 ஆம் ஆண்டு உற்சவ காலத்திலும் உற்சவ நாட்கள் முழுவதும் ஆலயத்திலேயே தங்கியிருந்து எம்பெருமானை வழிபட்டு வந்தார்கள். இவ்வாறு கைதடிச் சாமியார் ஆலயத்தில் தங்கியிருப்பதற்கு திட்டமிட்டு வந்தாலும் மிகவும் சொற்ப பணத்துடனும் மற்றும் உடுப்பதற்கு இரண்டு வேட்டிகள் உள்ளடக்கியதான சிறிய பொட்டளத்துடன் மட்டுமே வருகை தந்தார்கள். மேலும் அவ்வாறு கொண்டு வந்த அந்த சிறிய பொட்டளத்தை பாதுகாப்பாக பேணுவதற்காக ஆலயத்தின் வடக்குத் திசையில் உள்ள ஒரு வீட்டில் வைத்திருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் இவர் குளித்துவிட்டு உடைகளை மாற்றுவதற்கு அந்தப் பொட்டளத்தைத் திறந்தபொழுது அதற்குள் இருந்த வேட்டி காணாமல் போய்விட்டது. இதனால் அந்தக் கைதடிச் சாமியார் மிகவும் சங்கடமும் வேதனையும் அடைந்தார்கள்.

இந்த நிலையில் காலை நீராடும் பொழுது தினமும் உடுத்திருக்கும் வேட்டியைத் தோய்த்துக் காயவைத்து அது உலரும் வரை காவல் நின்று அது உலர்ந்தபின் அதே வேட்டியை மீண்டும் அணிந்து கொள்ளும் நிலைமை அவருக்கு ஏற்பட்டது.

இதனால் கைதடிச் சாமியார் தினமும் பல்வேறு சிரமங் களுக்கு ஆளாகும் நிலை ஏற்பட்டது. சந்நிதியானே நீதான் என்னை இங்கே அழைத்தாய். உன்னை வணங்குவதைத் தவிர எனக்கு வேறு சிந்தனையே இல்லை. மேலும் மற்றவர்களின் பாவங்களைப் போக்குவதற்காக எனது உடலையும் தினமும் வருத்துகின்றேன். இந்த நிலையில் இவ்வாறான சங்கடமான துன்பத்தை எனக்குத் தரலாமா என சந்நிதியானிடம் மனமுருகி முறையிட்டார்கள்.

இவ்வாறு தனது துன்பத்தை சந்நிதியானிடம் முறையிட்ட ஒரு சில நாட்களில் இவருடன் ஒன்றாகப் பழகும் ஆலயத்தில் தங்கியிருக்கும் இன்னொரு அன்பர் இவரது வேட்டியை அணிந்திருப்பதை கைதடிச் சாமியார் கண்டுவிட்டார்கள். அதனை அந்த அன்பரிடம் விநயமாகக் கேட்டும் அந்த அன்பர் அது தன்னுடையது அதனைத் தான் புதிதாக வாங்கியது எனவும் கூறி அதனை வழங்க மறுத்துவிட்டார். கைதடிச் சாமியாருக்கு அது தன்னுடையது தான் என்று தெரிந்திருந்தாலும் அத்துடன் மௌனமாகிவிட்டார்கள்.

தன்னுடைய வேட்டியை சாமியார் இனம்கண்டு கொண்டாலும் அது தன்னுடையதுதான் என உறுதி செய்வதற்கு நான் என்ன செய்வேன் இது என்ன சோதனை என கலக்கம் அடைந்து இதற்கு நீதான் ஒரு தீர்வு காணவேண்டுமென்று மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியானிடமே முறையிட்டார்கள். மேலும் நான் ஒரு வேட்டியுடன் தினமும் இவ்வாறு சிரமப்படும்பொழுது அதனை நீ பார்த்திருப்பது முறைதானா எனவும் உரிமையுடன் சந்நிதியானிடம் வேண்டுதல் செய்தார்கள்.

இரண்டு நாட்கள் கழித்து அந்த அன்பர் மீண்டும் அதே வேட்டியை அணிந்திருப்பதை கைதடிச் சாமியார் அவதானித்தார் கள். இப்பொழுது கைதடிச் சாமியார் அந்த வேட்டி தன்னுடையது தான் என்பதை நன்கு உறுதிப்படுத்தி கொண்டார்கள். ஆம் ஆலயத்தின் உற்சவம் ஆரம்பித்த ஒரு சில நாட்களில் தனது கால் விரலில் ஏற்பட்ட ஒரு காயத்திற்கு கட்டுப் போடுவதற்கு வேறு துணி கிடைக்காமையால் இந்த வேட்டியின் ஒரு தொங்கலில் சிறிய துணியைக் கிழித்திருந்ததும் அவ்வாறு கிழிந்திருந்த இடம் அன்பர் உடுத்திருந்த வேட்டியில் அப்பட்டமாக வெளிப்பட்டதையும் சாமியார் கண்டு கொண்டார்கள்.

வேட்டியை அபகரித்த அன்பருக்கு சங்கடத்தைக் கொடுக்காமல் தனக்கு வேண்டிய இன்னொரு அன்பர் மூலம் வேட்டிக்குரிய அடையாளத்தை வெளிப்படுத்தி வேட்டியைப் பெற்றுக் கொண்டார்கள். வேட்டியை எடுத்து அணிந்த அன்பரும் தனது தவறை உணர்ந்து கொண்டார்கள்.

கைதடிச் சாமியார் தனக்கு பெருவிரலில் காயம் ஏற்பட்ட பொழுதும், அது வழமைக்கு மாறாக மாறாது இருந்தபோதும் அதற்கு மாற்றுவழி தென்படாது வேட்டியில் சிறிய பகுதியைக் கிழித்தபோதும் இவை எல்லாம் இயல்புக்கு மாறாக நடக்கின்றனவே என்று அவர் அப்பொழுதே நினைத்துள்ளார். ஆனால் சந்நிதியான் தனக்கும் ஒரு சோதனையை ஏற்படுத்தி தனது கருணையை மீண்டும் வெளிப்படுத்த அவற்றை எல்லாம் காரணத்துடனேயே சந்நிதியான் அப்பொழுது நடாத்தியுள்ளான் என்று சுவாமிகள் மனம் உருகி அடியேனுக்கு வெளிப்படுத்தி னார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் இறுதியாக அவரது கால்விரல் காயத்திற்கு கட்டுப் போடுவதற்காக வேட்டியில் கிழிக்கப்பட்ட அடையாளமே பிரச்சனைக்குத் தீர்வாக அங்கே அமைந்திருந்தது. இவை எல்லாம் சந்நிதியானுடைய திருவிளையாடல்களே என்பதை மன நிறை வுடன் கைதடிச் சுவாமிகள் அடியேனிடம் பகிர்ந்து கொண்டார்கள்.



24.03.2017 வெள்ளிக்கிழமை ஆலய வாசலில் கைதடிச்சாமிகள் வழமைபோல இரும்புக்கம்பியினால் அடித்து தனது உடலை வருத்தும் காட்சி

மானிடராகப் பிறந்த எல்லோரும் இவை போன்ற சங்கடங் களையும் துன்பங்களையும் அன்றாடம் எதிர்நோக்கித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு யாரும் விதிவிலக்காக இருக்கமுடியாது. இதுதான் இவ்வுலக வாழ்வின் யதார்த்தம்.

அதேநேரம் சந்நிதியானை நம்பி வந்தவர்களை சந்நிதி யானும் கைவிடுவதில்லை.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் எட்டு

அன்று வெள்ளிக்கிழமை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகனது மதியப்பூசை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வழமைபோல வள்ளியம்மனுடைய பூசையைத் தொடர்ந்து வள்ளி அம்மனுடைய வாசலுக்கு எதிரே சிவநாகதம்பிரானை மையமாகக் கொண்ட நவக்கிரகங்களுக்கு அபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அடியார்கள் அந்த அபிஷேகத்தை கண்குளிரக் கண்டு உள்ளத்தால் உவகை பொங்க வணங்கிக் கொண்டிருக் கின்றார்கள்.

அப்பொழுது திரு. ந. நற்குணம் அவர்களும் இவ்வாறான உணர்வலைகளுடன் வணங்கிக் கொண்டிருந்தாலும் பூசை நடைபெற்றுக் கொண்டிருக்கும் விக்கிரகங்கள் அமைந்த கட்டிடத் தொகுதிக்கு நேரே வடக்குப் பக்கமாக வெளிவீதியிலே நின்று வணங்கிக் கொண்டிருந்தார்கள். தந்தையார் இறைபதம் அடைந்து ஒரு வருடம் முடிவடையாமல் ஆலயத்திற்குச் செல்லக்கூடாது என்று தமது முன்னோர்கள் கூறுகின்ற நடைமுறையை அனுசரிக்க வேண்டுமென்பதற்காகவே அவர் வெளிவீதியிலே நின்று வணங்கிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது சிவநாகதம்பிரான் உட்பட நவக்கிரகங்கள் மற்றும் பல விக்கிரகங்கள் உள்ளடக்கிய அந்த சந்நிதியில் செய்யப்படும் அபிஷேகத்தின் புனித தீர்த்தத்தை அங்கே நின்றவர்கள் கைகளால் ஏந்தி அருமருந்தாக நினைத்து அதனை பருகிக் கொண்டிருந்தனர். சிவநாகதம்பிரான் உட்பட நவக்கிரகங் களையும் உள்ளடக்கிய அந்த விக்கிரகங்களுக்கு செய்யப்படும் அபிஷேகத்தின் தீர்த்தம் தனித்துவமான மகிமையும் சிறப்பும் கொண்டது. அது ஒரு நோய் தீர்க்கும் புனிதமான தீர்த்தமாகும். இவ்வாறு அது ஒரு நோய் தீர்க்கும் மருந்தாக அடியவர்களால் பயன்படுத்தப்படுவதை நன்கு தெரிந்தவர்களில் திரு. ந. நற்குணமும் ஒருவராவர். ஆனால் அவர் இப்பொழுது அந்த இடத்திலிருந்து அங்குள்ள அடியார்களிலிருந்தும் விலகி வெளிவீதியில் நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறார். எனவே அந்தத் தீர்த்தத்தைப் பெற்று தன்னால் அருந்த முடியவில்லையே என்ற ஆதங்கம் அவருக்கு ஏற்பட்டது.

ஆனாலும் அத்தீர்த்தத்தை எப்படியும் அருந்த வேண்டுமென்ற உணர்வும் உந்துதலும் அவர் உள்ளத்தில் மேலோங்கியது. அவருக்கு அருகில் அவருக்கு உதவக் கூடியவர்கள் எவரும் தென்படவில்லை. அவருடன் இணைந்து அவருடன் ஆலயத்திற்கு வருகை தருகின்ற அவரது மனைவி திருமதி ந. மேனகா அவர்களும் அன்று வரமுடியவில்லை. ஆகவே இவ்வாறான சூழ்நிலையில் அந்தத் தீர்த்தத்தைப் பருகுவதென்பது நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயம் என்பது வெளிப்படையாகவே விளங்கியது. இத்தகைய சூழ்நிலையில் தான் வெளிவீதியில் நின்றுகொண்டு சிவநாகதம்பிரான் தீர்த்தத்தை அருந்த நினைத்தது தனது அப்பாவித்தனமான செயல் என்பதை அப்பொழுது உணர்ந்துகொண்டார். மேலும் சந்நிதியானின் வாசலில் தான் அவ்வாறு ஆதங்கப்பட்டது தவறென்றும் தனக்குள்ளே சிந்தித்து திருப்திப்படுத்திக் கொண்டார்கள்.

இவ்வாறு குழப்பமான நிலையில் சிறிது நேரம் கண்களை மூடி சந்நிதியானைத் தியானித்துக் கொண்டிருந்த திரு. ந. நற்குணம் அவர்கள் கண்களை விழித்தபொழுது அங்கே ஒருவர் தன்னை நோக்கி வருவதை அவதானித்தார்கள். வருகின்றவ ருடைய பாங்கினை அவதானித்தபொழுது திரு. நற்குணம் அவர் களுக்கு வியப்பும் ஆச்சரியமும் ஏற்பட்டது. ஆம்! வருகின்றவர் மிகவும் கவனமாக அவரின் அருகில் வந்து கொண்டிருந்தார்கள். அவ்வாறு வந்தவர் இவரிடமே வந்து இந்தாருங்கள் ஐயா தீர்த்தம்.... குடியுங்கள்.... என்று தனது கைகளில் கவனமாக ஏந்திவந்த தீர்த்தத்தை திரு. நற்குணம் அவர்களது கைகளில் ஊற்றினார்கள். திரு. நற்குணம் அவர்கள் அதனை அமிர்தமாக நினைத்து மிகவும் பக்குவமாக வாங்கி பருகி தனது விருப்பத்தை நிறைவுசெய்து கொண்டார்கள். அதே நேரத்தில் அவரது உதடுகள் அவரை அறியாமலே கந்தா! கடம்பா! கார்த்திகேயா! என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருக நாமங்களை உச்சரிக்க கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரியத் தொடங்கியது.

மேலும் நடந்து முடிந்த சம்பவம் நிஜமாகவே நடந்தது தானா என்பதை அவரது உள்ளம் உறுதியாக நம்புவதற்கு உண்மையில் சிறிது நேரம் எடுத்துவிட்டது.

திரு. ந. நற்குணம் அவர்களுக்கு அவ்வாறு தீர்த்தத்தை வழங்கிய அன்பர் உடுப்பிட்டியைச் சேர்ந்தவர் என்றும் தன்னை அறியாமலே இவ்வாறான ஒரு செயலைச் செய்ய வேண்டுமென தனது உள்ளம் தூண்டியதனால் அவ்வாறு தான் செயற்பட்டதாக அந்த அன்பர் மூலமே திரு. ந. நற்குணம் அவர்கள் பின்பு அறிந்து கொண்டார்கள்.



அறுபத்துமூன்று அடியார்களை அறுபத்து மூன்று நாயன்மார்களாக பாவனைசெய்து நடைபெறும் அறுபத்துமூவர் குருபூசை நிகழ்வு ஆச்சிரமத்தில் இடம்பெறுகிறது. அதில் திரு. திருமதி நற்குணம் தம்பதிகள் காட்சி தருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்! திரு. நற்குணம் அவர்கள் ஏக்கத்துடன் எதிர்பார்த்த அந்த புனிதமான தீர்த்தத்தை தன்னுடைய உண்மையான பக்தனுக்கு சந்நிதியான் கிடைக்கச் செய்துவிட்டான். நாங்கள் ஒரு மடங்கு பக்தி செலுத்தினால் எங்களுக்கு நூறு மடங்கு கருணையை வழங்குபவன்தானே சந்நிதி முருகன்.

திரு. திருமதி நற்குணம் தம்பதியினர் பருத்தித்துறை சுசிலா நகைமாளிகையின் உரிமையாளர்கள். சந்நிதியான் மேல் அசையாத நம்பிக்கை உள்ள தம்பதியினர். பிரதி வெள்ளிதோறும் சந்நிதியானிடம் வந்து சந்நிதி முருகனை வழிபட்டுச் செல்வதை முக்கிய கடமையாகக் கொண்டவர்கள். மேற்படி சம்பவம் நான்கு வருடங்களுக்கு முன்பு இடம்பெற்றது. 2004ஆம் ஆண்டு சந்நிதியானுடைய சித்திரத்தேர் உற்சவத்தின் பொழுது இதே தம்பதியினருக்கு நடைபெற்ற இன்னுமொரு அற்புத அனுபவத்தை அடியார்களுக்கு இங்கே வழங்குகின்றோம்.

ஓம் முருகா!

## சந்நிதியில் திருமணங்கள்

ஓமம் வளர்த்து வேத மந்திரங்கள் ஒலிக்க மேற்கொள்ளப்படும் திருமணச் சடங்குகளுக்கு நிகராக சந்நிதியானின் சித்தப்படி வள்ளி அம்மன் சந்நிதியில் தீபாராதனையினடிப்படையில் நிகழும் திருமணங் களின் சிறப்பை நாம் இன்றும் சந்நிதியில் காணமுடியும்.

எவ்வளவு வசதிகள், வாய்ப்புகள் தமக்கு கிடைத்தாலும் அடியவர்கள் பரம்பரை பரம்பரையாக சந்நிதியில் தமது திருமணங்களை நடாத்துகின்ற செயற்பாட்டை அவர்கள் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர். ஒரே நாளில் இருபதுக்கு மேற்பட்ட திருமண நிகழ்வுகள் நடைபெறும் விந்தையும் வினோதமும் இப்பொழுதும் இங்கே இடம்பெறுகின்றன. அண்மையில் அதாவது 18.03.2017 சனிக்கிழமை ஏறத்தாழ பத்து திருமணங்கள் சந்நிதியில் இடம்பெற்றதையும் நாம் காணமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஒன்பது

2003ஆம் ஆண்டு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் உற்சவத்தின் பொழுது தேர்த்திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஆலயத்தின் மேற்கு வீதியில் அடியார்கள் கண் முன்னாலேயே எம்பெருமான் வீதி உலா வந்த பழைய கட்டுத்தேர் குடைசாய்ந்தது. இந்த துன்பியல் நிகழ்வும் அதனால் பயமும் பதட்டமுமடைந்த ஆயிரக்கணக்கான அடியார்கள் பட்ட துன்ப உணர்வுகளும் அதேநேரம் இன்னும் பல அடியார்கள் அதனைப் பொறுக்கமுடியாது ஆலயத்திலேயே வாய்விட்டு கதறி அழுத சம்பவங்களும் நடந்து முடிந்த சம்பவங்களாகும்.

இந்த துன்பியல் உணர்வுகளை எல்லாம் மறக்கக்கூடிய வகையில் 2004 ஆம் ஆண்டு சந்நிதி வேலவனின் உற்சவத்தில் சந்நிதி வேலவனுக்கு மட்டுமல்ல விநாயகப் பெருமானுக்கும் புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டமையும் ஒரே நாளில் சந்நிதி வேலவனும் விநாயகப் பெருமானும் சித்திரத்தேர்களில் முதன் முதலாக வீதி உலா வர இருக்கின்றனர் என்ற செய்தியும் அனைத்து அடியார்களுக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் விடயமாக அமைந்திருந்தது.

1983 ஆம் ஆண்டு இனக் கலவரம் ஏற்பட்டு தென் பகுதிகளில் வாழ்ந்த மக்களும் வடபகுதிக்கு இடம்பெயர்ந்த நிலையில் சந்நிதியில் மிக அதிகளவு அடியார்கள் ஒன்றுகூடினர். அதன் பின்னர் மிக அதிகளவு அடியார்கள் சந்நிதியில் ஒன்றுகூடிய நிகழ்வாக நாம் 2004ஆம் ஆண்டு சந்நிதியானுடைய தேர்த் திருவிழாவைக் குறிப்பிடலாம். இவ்வாறு யாரும் எதிர்பார்க்காத அளவு அடியார்கள் தேர்த்திருவிழாவில் ஒன்று கூடியமையால் மக்கள் செய்வதறியாது குழப்பமடைந்த அதேவேளை ஜன சமுத்திரத்தின் மத்தியில் தாங்கள் செல்ல நினைத்த இடங்களுக்கு செல்ல முடியாதும் விரும்பிய இடத்தில் நின்று வழிபட முடியாதும் அடியார்கள் தத்தளித்துக் கொண்டிருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில் இரண்டு புதிய சித்திரத்தேர்களையும் அவை வீதி உலா வந்துகொண்டிருக்கின்ற காட்சிகளையும் இந்த ஜன சமுத்திரத்தின் மத்தியிலும் ஏதோ ஒரு வகையில் பார்க்க முடிகின்றதே என்ற மனநிறைவுடனேயே பலரும் ஆலயத்தில் நின்று வீதிஉலா வந்து கொண்டிருக்கின்ற வேலவனை வணங்கிக் கொண்டிருந்தனர். பருத்தித்துறை சுசிலா நகைக்கடை உரிமையாளர்களான திரு. திருமதி ந. நற்குணம் தம்பதிகளும் அன்றைய தேர்த் திருவிழாவில் இவ்வாறான மக்கள் சமுத்திரத்தின் மத்தியில் நின்று எம்பெருமானை வணங்கிக் கொண்டிருந்தனர்.

ஆற்றங்கரை வேலவன் எழுந்தருளியிருந்த அந்தக் கம்பீரமான சித்திரத்தேர் இருப்பிடத்திலிருந்து அசைய ஆரம்பித்து அரோகரா அரோகரா என்ற அடியார்களின் ஓசைகள் வானத்தைப் பிளக்க மனதிற்கு இதமான மணி ஓசையுடன் தெற்கு வீதி, மேற்கு வீதி என்பவற்றையும் கடந்து வடக்கு வீதியில் உலா வந்து கொண்டிருந்தது. அப்பொழுது திரு. திருமதி ந. நற்குணம் தம்பதிகள் எம்பெருமான் சித்திரத்தேரில் உலா வருகின்ற காட்சியைக் கண்குளிரக் கண்டு உள்ளம் உருகி வழிபட்டுக் கொண்டிருந்தாலும் அவர்களது உள்ளத்தில் ஒரு விதமான பயமும் பதைபதைப்பும் ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

இப்பொழுது சந்நிதியானுடைய சித்திரத்தேர் வடக்கு வீதியிலும் கணிசமான பகுதியைத் தாண்டி தேரின் இருப்பிடத்தை நோக்கி அசைய ஆரம்பிக்கின்ற கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. இந்த நிலையில் திரு. திருமதி ந. நற்குணம் தம்பதியரின் உள்ளங்கள் மிகவும் பதட்டமடைய ஆரம்பித்தன. ஆம்; ஒவ்வொரு வருடமும் சந்நிதியானுடைய தேர்த் திருவிழாவின் பொழுது தேரின் வடத்தனைப் பிடித்து தேரினை இழுக்கின்ற செயற்பாட்டை தவறாது நிறைவேற்றி வருகின்ற திரு. நற்குணம் அவர்களுக்கு இந்த வருடம் அதுவும் சந்நிதியான் புதிய சித்திரத்தேரில் வீதி உலா வருகின்ற இந்த சந்தர்ப்பத்தில் தேரின் வடத்தினைத் தொட்டு இழுக்கமுடியாத நிலை ஏற்பட்டதே இவ்வாறான இவர்களின் வருத்தத்திற்கு காரணமாகும்.



289487

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. ந. நற்குணம் அவர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு தேரின் வடத்திற்கு ஓரளவு அண்மையில் நிற்கின்ற நிலை ஏற்பட்ட பொழுதிலும் வடத்தினைத் தொடுவதற்கோ அதனை இழுப்பதற்கோ முடியாத அளவிற்கு அடியார்கள் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. இந்த நெருக்கடியான சூழ்நிலையை உணர்ந்து கொண்ட அவரது மனைவி கணவனைப் பார்த்து ''என்னப்பா தேரும் இழுத்து முடியப்போகுது நீங்கள் வடத்தினைத் தொட்டு இழுக்க முடியாது போகப் போகின்றதே'' என்று மிகுந்த கவலையுடன் உண்மையின் யதார்த்தத்தை வெளிப்படுத்தினார்கள்.

திரு. ந. நற்குணம் அவர்களது உள்ளம் தனது மனைவி கூறுகின்ற விடயம் முற்றிலும் உண்மையானது என்பதை ஏற்றுக் கொண்டது. இதனால் மனைவிக்கு எந்தவிதமான ஆறுதல் வார்த்தைகளையும் அவரால் கூறமுடியவில்லை. அது மட்டுமல்ல சித்திரத்தேர் மேலும் இருப்பிடத்தை நோக்கி அசைந்து செல்லச் செல்ல திரு. ந. நற்குணம் அவர்கள் அவரது மனைவியை விடவும் குழப்பமும், பதட்டமும் அடைந்ததுடன் ஏதோ ஒன்றைப் பறிகொடுத்தவர் போன்ற நிலைக்கும் ஆளாகி செய்வதறியாது கலக்கமடையத் தொடங்கினார்கள்.

என்ன அதிசயம்! அப்பொழுது அவருக்குப் பக்கத்தில் தேர் வடத்தினப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்த ஒரு முதியவர் திரு ந. நற்குணம் அவர்களைப் பார்த்து **''என்ன யோசிக்கின்றீர்கள் இந்தாருங்கள் இந்த இடத்தனில் நின்று வடத்தினைப் பிடித்து இழுங்கள்''** என்று தான் பிடித்திருந்த வடத்தினை திரு. நற்குணம் அவர்கள் பிடிப்பதற்கு வழிவிட்டு தான் விலகி நின்றார்கள்.

அடுத்த கணமே சித்திரத் தேரின் வடத்தினைப் பிடித்து சில அடிகள் தூரம் இழுத்த திரு. ந. நற்குணம் அவர்கள் தனது மிகப்பெரிய வேண்டுதல், வருடாவருடம் நிறைவேற்றுகின்ற கைங்கரியம் நிறைவேறிவிட்ட திருப்தியில் முழுமையான மன நிறைவடைந்தார்கள். மிகவும் நெருக்கடியான பரபரப்பான அந்த சூழ்நிலையில் தனக்கு வழிவிட்ட அந்த முதியவருக்கு நன்றியைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்து ஆலய தரிசனத்தை முடித்துவிட்டு முழு நிறைவுடன் வீடு திரும்பினார்கள்.

தனது வேண்டுதல் நிறைவேற்றப்பட்ட திருப்தியில் வீடு திரும்பிய திரு. ந. நற்குணம் அவர்களது உள்ளம் ஆலயத்தில் நடந்து முடிந்த சம்பவத்தை ஆழமாக மீட்டுப் பார்க்கத் தொடங்கியது. ஆலயத்தில் வடத்தைப் பிடித்து இழுப்பதற்கு வழி வசதி செய்த அந்த முதியவரது தோற்றம் அவர் சொன்ன வார்த்தைகள் அவர் நடந்து கொண்ட முறை என்பவற்றை எல்லாம் சிந்திக்கத் தொடங்கினார்கள்.

இவ்வாறு ஆழமாகச் சிந்தித்த பொழுதுதான் அது சாதாரண நிகழ்வு அல்ல சந்நிதியானுடைய திருவிளையாடல் என்பதை உணர்ந்து கொண்டார்கள். இவ்வாறு உணர்ந்துகொண்ட பொழுது அவரது உடல் புல்லரித்தது. உள்ளம் சந்நிதியானுடைய கருணையை நினைத்தும் அங்கே நடந்த திருவிளையாடலை எண்ணியும் ஆனந்தப் பரவசமடையத் தொடங்கியது. அதே வேளை அந்த அற்புதம் நடைபெற்ற சமயம் தன்னால் அதனை உணரமுடியாமல் போய்விட்டதே என்ற ஆதங்கமும் ஏற்பட்டது.

ஆம்! எது நடக்கின்றது? எப்படி நடக்கின்றது? ஏன் நடக்கின்றது? என்பதை யாரும் உணர்ந்துகொள்ள முடியாத வகையில் உற்சவ காலத்தில் அடியார்களது விருப்பங்கள், தேவைகளை நிறைவு செய்வதுதானே சந்நிதியானுடைய திருவிளையாடல் ஆகும். அதற்கு திரு. திருமதி நற்குணம் குடும்பம் விதிவிலக்காக முடியுமா?

கலியுகக் கந்தனின் இவ்விதமான அற்புத நிகழ்வுகளின் சிறப்புக்களையும் பெருமைகளையும் எம்மால் வார்த்தைகளால் வர்ணிக்க முடியுமா?

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் பத்து

2004 ஆம் ஆண்டு இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. திரு. இ. சண்முகசுந்தரம் ஆசிரியர் புலோலியில் உள்ள தனது வீட்டில் அன்றைய பொழுதை ஓய்வாகவும் மகிழ்ச்சியுடனும் போக்கிக் கொண்டிருந்தார்கள். அன்றைய மதிய உணவை தனது மனைவியுடனும் பிள்ளைகளுடனும் ஒன்றாக இருந்து அருந்தியதால் இரட்டிப்புச் சுவையுடன் உணவை உட்கொண்ட திருப்தியும் அவருக்கு ஏற்பட்டிருந்தது. இவ்வாறான மகிழ்ச்சியான சூழலில் சிறிதுநேரம் ஓய்வெடுத்தபின் நேரத்தைப் பார்க்கின்றார். நேரம் 4 மணி 15 நிமிடத்தைக் காட்டியது.

தனது கற்பித்தல் தொடர்பாக புத்தகத்தில் குறிப்பிட்ட ஒரு விடயத்தைப் பார்க்க வேண்டியிருந்ததால் திரு. சண்முகசுந்தரம் ஆசிரியர் சம்பந்தப்பட்ட புத்தகத்தை எடுத்து அதனை வாசிக்க ஆரம்பித்தார்கள். இவ்வாறு இ. சண்முகசுந்தரம் ஆசிரியர் அவர்கள் அந்தப் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கும் பொழுது எதிர்பாராத விதமாக அவரது மூக்குக் கண்ணாடி நிலத்தில் விழுந்து உடைகின்ற அந்தக் கவலைக்குரிய சம்பவம் நடைபெற்றது. ஆம் அவ்வாறு அவரது மூக்குக் கண்ணாடி நிலத்தில் விழுந்த அந்தச் சம்பவத்தால் அவரது மகிழ்ச்சி எல்லாம் நொடிப்பொழுதில் மறைந்து உள்ளத்தில் தாங்கமுடியாத துன்பம் ஏற்பட்டது.

அவர் மிகவும் கவனமாகப் பேணி நீண்ட காலமாகப் பயன் படுத்தி வந்த பொருள் என்பது மட்டுமன்றி அவரது தொழிலுக்கு எந்நேரமும் பயன்படுத்த வேண்டிய முக்கியமான ஒரு உபகரண மாகவும் அந்தக் கண்ணாடி அமைந்திருந்ததால் அதனை மிகவும் மதிப்புடனேயே திரு. சண்முகசுந்தரம் ஆசிரியர் அவர்கள் பேணி வந்தார்கள். அது மட்டுமன்றி அவரது குடும்ப நிலவரத்தில் மீண்டும் அவ்வாறானதொரு கண்ணாடியை வாங்குவதென்பதும் அவருக்கு சிறிது சுமையாக இருக்கும் என்பதும் அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையை கூட்டுவதற்கு இன்னொரு காரணமாகவும் அமைந்திருந்தது.

திரு. இ. சண்முகசுந்தரம் ஆசிரியருக்கு இவ்வாறான ஒரு துன்பம் ஏற்படுவதற்கு யாரும் பொறுப்பல்ல. கண்ணாடி உடைந்த சம்பவம் தவறுதலாக ஏற்பட்ட ஒரு நிகழ்வு. ஆனாலும் நடந்து முடிந்த சம்பவத்தால் அவருக்கு மிகுந்த வேதனை ஏற்பட்டது மட்டுமன்றி அதனை அவரால் ஜீரணிக்க முடியாத நிலையும் காணப்பட்டது. இந்நிலையில் மனதில் ஏதோ நினைத்தவராக கலங்கிய கண்களுடன் உடைந்த கண்ணாடியை வைத்து வழிபாடு செய்தார்கள். இவ்வாறு வழிபாடு செலுத்தியதன் மூலம் தனது பொறுப்பை தனக்கு மிகவும் வேண்டிய இன்னொருவரிடம் கையளித்துவிட்டது போன்ற ஒரு உணர்வு அவருக்கு ஏற்பட்டது மட்டுமன்றி அவரது உள்ளத்தில் இருந்த துன்பமும் சிறிது குறைய ஆரம்பித்தது.

மறுநாள் அதாவது 2004.08.16 சந்நிதியானுடைய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகின்ற நாள். அன்றைய தினம் வழமைபோல திரு. இ. சண்முகசுந்தரம் ஆசிரியர் அவர்கள் ஆலயத்திற்குச் சென்று உள்ளம் உருக சந்நிதியானை வழிபாடு செய்தார்கள். அவ்வாறு வழிபாடு செய்தபின்பு ஆலயத்தை விட்டுத் திரும்பும் பொழுது நீயே எனக்கு தஞ்சம் அப்பா! உனது அடிமையாகவே நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் ஆனபடியால் தான் எனக்கு ஏற்படுகின்ற துன்பங்களை எல்லாம் என்னை அறியாமலே உன்னிடம் சமர்ப்பிக்கிறேன் என்று தனக்குத் தானே கூறிக் கொண்டவராய் சந்நிதியான் ஆச்சிரமத்தை வந்தடைந்தார்கள். நீண்டகாலமாக ஆச்சிரமத்திற்கு வந்துசெல்கின்ற அன்பர்களில் திரு. சண்முகசுந்தரம் ஆசிரியரும் ஒருவர் என்பதால் ஆச்சிரமத்திற்கு வந்த ஆசிரியர் அங்கே சிறிது ஓய்வாக இருந்த ஆச்சிரமத்தின் சுவாமிகளுடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு உரையாடிக் கொண்டிருக்கின்ற பொழுதுதான் அந்த அற்புதமான சம்பவம் நடந்தேறியது. ஆம் வழமைபோல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சிரமத்தின் சுவாமிகள் அங்கே காணப்படுகின்ற தனது மேசையின் அருகில் இருந்தவாறு திரு. சண்முகசுந்தரம் ஆசிரியருடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது கிருஸ்ணபிள்ளை என்ற அன்பர் அங்கே சுவாமிகளிடம் நேராக வந்து ஐயா இந்தாருங்கள் கண்ணாடி, நீங்கள் எனக்குத் தந்தது. இது எனக்கு அளவாக இல்லை, இதனை வேறு யாருக்கும் பொருந்தக் கூடியவர்களுக்கு வழங்குங்கள் என்று கூறி தான் கொண்டுவந்த கண்ணாடியை சுவாமிகளிடம் வழங்கிவிட்டு திரும்பச் சென்றுவிட்டார்கள்.

மூக்குக் கண்ணாடி தொடர்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் மேற்படி உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்த திரு. இ. சண்முகசுந்தரம் ஆசிரியருக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. ஏதோ ஒரு நிகழ்வு நடக்கப் போகின்றதென்று அவருடைய உள்ளுணர்வு காட்டியது. உடலும் உள்ளமும் புல்லரித்தது. வாங்கிலில் அமர்ந்திருந்த ஆசிரியர் எழுந்து சுவாமிகளின் மேசைக்கு அருகில் சென்றார்கள். அந்தக் கண்ணாடியை என்னிடம் தாருங்கள் ஐயா எனக்குப் பொருத்தமாக இருக்கின்றதா எனப் பார்ப்போம் எனக் கூறி அதனை வாங்கி அணிந்து பார்த்தார்கள். அணிவதற்கு மிகவும் அளவாக இருந்தது. இது அவருக்கு ஓரளவு நம்பிக்கையைக் கொடுத்தது. அருகில் இருந்த பத்திரிகையை எடுத்து தற்பொழுது அணிந்து கொண்டிருக்கும் கண்ணாடியினூடாக வாசித்துப் பார்த்தார்கள். என்ன ஆச்சரியம் அவரது உடைந்த கண்ணாடியால் வாசிப்பது போன்ற தெளிவுடன் வாசிக்கக்கூடியதாக இருந்தது. அதே கண்ணாடியின் ஊடாக ஆச்சிரமத்தின் கடிகாரத்தைப் பார்த்தார்கள். சரியாக முதல்நாள் அவரது கண்ணாடி உடைந்து துன்பப்பட்டு உடைந்த கண்ணாடியை முருகப் பெருமானின் படத்தின்முன் வைத்து முறையிட்ட அதே நேரத்தைக் கடிகாரம் காட்டியது. சந்நிதியானின் கருணையை எப்படி வார்த்தைகளால் கூறுவதென தெரியாது மகிழ்ச்சியால் உறைந்து போய்விட்டார்கள். ஆச்சிரமத்தின் சுவாமிகள் திரு. சண்முகசுந்தரம் ஆசிரியருக்கே அந்தக் கண்ணாடியை வழங்கினார்கள். தற்பொழுது அந்த மூக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடியின் உதவியுடனேயே தனது இயல்பான கருமங்களை எல்லாம் திரு. இ. சண்முகசுந்தரம் ஆசிரியர் ஆற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.



திரு. இ. சண்முகசுந்தரம் ஆசிரியர் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர். இந்த சம்பவம் நடைபெற்றபொழுது கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் கடமையாற்றிக் கொண்டிருந் தார்கள். தற்பொழுது ஓய்வுபெற்று சந்நிதியானது சிந்தனையுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர் சந்நிதி முருகன் மீது சாதாரண நம்பிக்கை கொண்டவர் அல்ல. அசையாத நம்பிக்கை கொண்டவர். அவர் மேற்படி சம்பவத்தைக் குறிப்பிடும் பொழுது ''முதல்நாள் அழுதேன் மறுநாள் அதேநேரம் சந்நிதியான் மூக்குக் கண்ணாடியை எனக்கு வழங்கியுள்ளான். இது அல்லவா அற்புதம்'' என அடியேனிடம் குறிப்பிட்டார்கள்.

ஆம்! கடந்த 25 வருடங்களாக சந்நிதியானுடைய ஆலயத் திலேயே தங்கி கந்தசஷ்டி விரதத்தை தூய்மையாகவும் உண்மை யான பக்தியுடனும் அனுஷ்டித்து வருகின்ற அன்பர் திரு. சண்முகசுந்தரம் ஆசிரியர். அப்படிப்பட்ட அடியவர் சந்நிதியானிடம் ''உன்னை நம்பித்தான் நான் வாழ்கிறேன்'' என்று கூறிய பின்பும் சந்நிதியான் அதனை மௌனமாக பார்த்துக் கொண்டிருப்பானா?

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் பதினொன்று

சந்நிதியில் சரியைத் தொண்டுகளை மேற்கொண்டு வருகின்ற அடியவர்கள் ஏராளம். ஒரு தசாப்தத்திற்கு முன்பு இவ்வாறு சரியைத் தொண்டில் ஈடுபட்ட அன்பர்களில் ஒருவர் வேலுப்பிள்ளை நாகலிங்கம். சொந்த இடம் கொல்லங்கலட்டி மாவிட்டபுரம். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் நீண்ட காலமாக கடமையாற்றியவர்.

ஆம், இவர் உடல் நோயினால் வெகுவாகப் பாதிக்கப் பட்டவராக எழுந்து நடமாட முடியாதவராக ஏனையவர்களின் உதவியுடன் சந்நிதியானின் வாசலை வந்து அடைந்தார்கள். அவர் எங்கும் எழுந்து நடமாட முடியாத காரணத்தால் சந்நிதியானது வாசலுக்கு நேரே காணப்படும் ஆலமரத்தின் கீழேயே படுத்தவாறு சந்நிதியானை வணங்கி தனது துன்பத்தை போக்குமாறு வேண்டுதல் செய்த வண்ணம் அங்கேயே காலத்தைப் போக்கிக் கொண்டிருந்தார்கள். அது மட்டுமன்றி மற்றவர்களிடம் யாசித்துப் பெற்றவற்றைக் கொண்டே தனது வாழ்நாளை கழிக்கின்ற சூழ்நிலையும் அவருக்கு ஏற்பட்டுவிட்டது.

இவ்வாறு திரு. வே. நாகலிங்கம் அவர்கள் பல்வேறு வகைப்பட்ட நோய்களுடன் ஆலய வாசலில் தங்கியிருந்து துன்பப்படுவதை அவதானித்த பலர் அவரை ஆஸ்பத்திரிக்குச் செல்லுமாறும் அங்கே சென்று சிகிச்சை பெற்று நோயைக் குணப்படுத்துவதே முதற் செய்ய வேண்டிய காரியம் என ஆலோசனை வழங்கினார்கள். உண்மையில் ஒரு சராசரி மனிதனது நிலையில் நின்று பார்க்கும் பொழுது திரு. நாகலிங்கம் அவர்கள் ஆஸ்பத்திரிக்கே சென்றிருக்க வேண்டும். அந்த வகையில் ஆலோசனை கூறியவர்களின் கூற்றுக்களும் சரியான கூற்றுக்களாகவே கொள்ளப்பட வேண்டும்.

ஆனால் திரு. நாகலிங்கம் அவர்கள் **''நான் இந்தப் பகுதியில் உள்ள மிகப் பெரிய டி.எம்.ஓ. (வைத்திய அதிகாரி) வான சந்நிதியானிடம் தான் வந்துள்ளேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை நம்பித்தான் வந்துள்ளேன். நான் என்ன செய்வ தென்றாலும் எங்கே போவதென்றாலும் அவரது விருப்பப் படியே செய்வேன்" என அனைவருக்கும் பதில் கூறினார். அதுமட்டுமல்ல அவர் கூறியது போன்று ஒரு வாரம் இரண்டு வாரம் அல்ல இரண்டு வருடங்கள் சந்நிதியானின் வாசலிலேயே அவனது சிந்தனையுடன், அவனது நாமங்களை உச்சரித்துக் கொண்டு அவனிடமே தஞ்சம் புகுந்து விட்டார்கள். இரவில் படுக்கைக்கும் மற்றும் நீராடுதல் போன்ற செயற்பாடுகளுக்கும் மற்றவர்களின் உதவியுடன் செல்லுகின்ற நேரங்களைத் தவிர மிகுதி முழு நேரமும் அந்த ஆலமரத்தின் நிழலையே தனது இருப்பிடமாக்கிக் கொண்டார்கள்.

இவ்வாறு உண்மையான நம்பிக்கையுடன் அவனையே நம்பி அவனிடம் தஞ்சமடைந்த ஓர் அன்பரை சந்நிதியான் அப்படியே பார்த்துக் கொண்டிருப்பானா? அவன் கலியுகக் கந்தன் அல்லவா! அவன் கருணையே வடிவானவன் அல்லவா! அதனால் திரு. நாகலிங்கம் அவர்களின் வருத்தத்தைப் போக்கி அவரை தனது அடியவனாக்கத் திருவுள்ளம் கொண்டார்கள்.

2002 ஆம் ஆண்டு சந்நிதி உற்சவம் முடிவடைந்து இரண்டு மூன்று கிழமைகள் சென்றுவிட்டன. ஒரு வெள்ளிக்கிழமை நேரம் 2.30 மணியை அண்மித்துக் கொண்டிருந்தது. மதிய உணவை அருந்திய பின் ஆலயத்தின் வாசலுக்கு எதிரேயிருக்கும் அந்த ஆலமரத்தின் கீழே படுத்திருந்தவாறு திரு வே. நாகலிங்கம் அவர்கள் களைப்பாறிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அவரது காலைப் பிடித்து யாரோ இழுப்பது தெரிந்தது. திடுக்கிட்டு கண் விழித்த திரு. நாகலிங்கம் அவர்கள் நான்கு பக்கமும் பார்த்தார்கள். அங்கே யாரையும் காணவில்லை. அவருக்கு பெரிய அதிசயம் ஏற்பட்டது. என்ன செய்வதென்று தெரியாது குழப்பமடைந்த திரு. நாகலிங்கம் அவர்கள் இறுதியாக சந்நிதியானுடைய மூலஸ்தானத்தை உற்றுநோக்கி அவனையே தியானித்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் நடந்து முடிந்த விந்தையான அந்தச் செயலின் அர்த்தம் புரியாது அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் தடுமாற்றம் அடைவதையும் அவரால் தடுக்க முடிய வில்லை.

அப்பொழுது அவரது உள்ளத்தில் நீ ஆஸ்பத்திரிக்குச் சென்று வா! நீ ஆஸ்பத்திரிக்குச் சென்று வா! என்ற உணர்வுகள் மிகத் தெளிவாகவும் திரும்பத் திரும்பவும் ஏற்பட்டுக் கொண்டே யிருந்தது. இந்த உணர்வு திடீரென்று தனது உள்ளத்தில் எவ்வாறு ஏற்படுகின்றதென அவருக்கே வியப்பாக இருந்தது.

சந்நிதியான் விடை தந்தால் தவிர இந்த இடத்தை விட்டு அசையமாட்டேன் என்று ஏறத்தாழ இரண்டரை வருடங்கள் ஆலயத்தில் தங்கியிருந்த திரு. நாகலிங்கம் இப்பொழுது சந்நிதியானே தனக்கு வழிகாட்டுவதாக உணர்ந்து கொண்டதனால் அன்றைய தினமே ஆலயத்தில் இருந்து புறப்படுவதற்கு முடிவு செய்தார்கள்.

ஆனாலும் தனியாகவே சந்நிதியில் தங்கியிருந்த திரு. நாகலிங்கம் தான் எப்படிச் செல்வேன்? யாருடைய துணையுடன் செல்வேன்? யார் எனக்கு பொருள் உதவி செய்வார்கள்? என்று சிந்தித்த பொழுது மனதில் ஏக்கமும் பயமும் ஏற்படத் தொடங்கியது. அத்துடன் ஆலயத்தின் முகப்பில் அவர் படுத்திருந்த ஆலமரத்திலிருந்து 10 மீற்றர் தூரத்தில் இருக்கும் பஸ் தரிப்பிடத்திற்குச் செல்வதற்குக் கூட அவருடைய உடல் நிலை இடங் கொடுக்காதிருந்தமையையும் அவர் உணரத் தவறவில்லை.

இவ்வாறான பரிதாபமான நிலையில் அவர் காணப்பட்டாலும் கூட கலியுகக் கந்தனாகவும் ஆபத்பாந்தனாகவும் விளங்குகின்ற சந்நிதி முருகனுடைய அருட்கடாட்சத்தின்படி நடைபெறும் காரியம் என்பதால் அவனே வழிகாட்டுவான் என்ற நம்பிக்கை உணர்வுடன் தனது பிரயாணத்தை திரு. நாகலிங்கம் அவர்கள் ஆரம்பித் தார்கள்.

அவருடைய நம்பிக்கை வீண்போகவில்லை. திரு. நாகலிங்கம் அவர்கள் ஆலயத்திலிருந்து புறப்பட்டு திரும்பவும் குணமடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திற்கு திரும்பும்வரை நடந்தேறிய விடயங்கள் அனைத்தும் அற்புதமான விடயங்களாகவே நடந்தேறின.

சம்பவம் நடந்த அன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அங்கு நின்றவர்களின் உதவியுடன் 752 இலக்க பேருந்தில் ஏறி வியாபாரி மூலையில் குடியிருக்கும் தனது குடும்ப நண்பரிடம் சென்றடைந்தார்கள். அன்றைய பொழுதை அங்கேயே கழித்தபின் அடுத்த நாள் அவர்கள் வழங்கிய புதிய உடுப்பு மற்றும் பண உதவி என்பவற்றைப் பெற்றுக் கொண்டார்கள். அத்துடன் பஸ் நிலையம் வரை அவர்களே அவரைக் கூட்டி வந்து யாழ்ப்பாணப் பேருந்தில் ஏற்றி அனுப்பி வைத்தனர்.

இவ்வாறு வழியில் எதிர்பாராது பல அன்பர்கள் செய்த உதவிகளுடன் யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரியின் வெளி நோயாளர் பகுதியை வந்தடைந்தாலும் அங்கே தனியாக வந்திருக்கும் தன்னை அவர்கள் வாட்டில் அனுமதிப்பார்களா? என்ற தயக்கம் அவருக்கு ஏற்பட்டது. சிறிது நேரம் அங்கேயே தயங்கியபடி காத்திருந்த பின் அங்கே கடமையாற்றிக் கொண்டிருந்த ஆண் தாதியிடம் தனது நிலமையை தயக்கத்துடன் வெளிப்படுத்தினார்கள். அத்துடன் தனது பெயரைக் குறிப்பிட்டு விலாசம் செல்வச்சந்நிதி தொண்டைமானாறு என்றும் பதிவு செய்தார்கள்.

இவருடைய நிலைமையை நன்கு உணர்ந்துகொண்ட அந்த ஆண் தாதியும் வெளி நோயாளர் பகுதியில் கடமையாற்றிய பெண் வைத்தியரும் அவரை நன்கு கவனித்து திருமதி நாகேந்திரம் அம்மா பார்வையிடும் 9ஆம் இலக்க வாட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். 9ஆம் இலக்க வாட் மேல்மாடியிலிருந்தமை யால் இரண்டு ஊழியர்கள் அவரை கதிரையில் இருத்தி தூக்கிச் செல்லும் நிலைமை ஏற்பட்டது. தன்னுடைய பரிதாப நிலையை ஒரு பக்கம் சிந்தித்த திரு. நாகலிங்கம் அவர்கள் மறுபக்கம் சந்நிதியான் தன் மீது காட்டுகின்ற கருணையை நினைத்த பொழுது அவரது கண்களில் இருந்து கண்ணீர் சொரிய ஆரம்பித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9ஆம் இலக்க வாட்டில் கடமையாற்றிய தலைமை வைத்தியத் தாதி திரு. நாகலிங்கத்தை அன்புடன் கவனித்ததுடன் திங்கட் கிழமை வைத்திய அதிகாரி திருமதி நாகேந்திரம் அம்மா அந்த விடுதிக்கு (வாட்டிற்கு) வந்தவுடன் முதல் ஆளாக திரு. நாகலிங்கத்தையே பார்வையிடுவதற்கு ஒழுங்குசெய்தார்கள்.

அங்கே திருமதி நாகேந்திரம் அம்மா திரு. நாகலிங்கத்தைக் கண்டவுடன் அவரது பரிதாப நிலைமையைக் கண்டு அதிர்ச்சி அடைந்தாலும் இன்னொரு வகையில் அவருக்கு மகிழ்ச்சியும் ஏற்பட்டது. ஆம்! திரு. நாகலிங்கம் வைத்திய அதிகாரி திருமதி நாகேந்திரம் அம்மாவின் சொந்த இடமான மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவர் மட்டுமல்ல அவரின் அயல் வீட்டில் வசித்து வந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்தவகையில் திருமதி நாகேந்திரம் அம்மா திரு. நாகலிங்கத்திற்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி அவரைப் பரிசோதனை செய்தார்கள். பரிசோதனை முடிவில் அவருக்கு நோய் எதுவும் இல்லை எனவும் உடனடியாக இரத்தம் ஏற்றுவதற்கும் அடுத்த நாள் குளுக்கோஸ் ஏற்றுவதற்கும் ஒழுங்குகள் செய்தார்கள்.

இவ்வாறு திரு. நாகலிங்கத்திற்கும் வைத்தியம் செய்யப்பட்டு சில நாட்களிலேயே அவர் குணமடையும் சூழ்நிலையும் ஏற்பட்டது. அதே நேரம் அங்கே இன்னொரு அதிசயமும் ஏற்பட்டது. அங்கே கடமையாற்றிய ஒரு வைத்தியத் தாதி மிகவும் விலை கூடிய ''சஸ்ரோஜின்'' மாவினையும் அதனைக் கரைத்துக் குடிப்பதற்குத் தேவையான பாத்திரங்கள் மற்றும் சீனி என்பவற்றை எல்லாம் திரு. நாகலிங்கத்திடம் கொடுத்து களைப்பு ஏற்படும் நேரங்களில் அதனைக கரைத்துக் குடிக்குமாறு வேண்டிக் கொண்டார்கள்.

திரு. நாகலிங்கத்திற்கு மேற்படி நிகழ்ச்சி அதிசயமாகவே தென்பட்டது. ஆஸ்பத்திரிக்கு வந்தால் மருந்து தருவார்கள். குளுக்கோஸ் ஏற்றுவார்கள் தேவைப்பட்டால் இரத்தமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுவார்கள். இவற்றை விட இவ்வாறான விலை கூடிய சத்தான மாவகைகளையும் தருவார்களா என குழப்பமடைந்தார்கள். ஆம்; அவர் விரைவாகக் குணமடைய வேண்டுமென்பதற்காக அங்கே கடமையாற்றிய தலைமை வைத்திய தாதி அவருக்கு இதனை இலவசமாக வழங்கியதை அவர் பின்பு அறிந்து கொண்டார். இவ்வாறு இவர் சந்நிதியை விட்டு ஆஸ்பத்திரிக்குச் சென்று ஏறத்தாழ 10 நாட்களுக்குள்ளேயே பூரண சுகமடைந்து சந்நிதியானிடம் திரும்பி விட்டார். இவர் திரும்பி தற்பொழுது இரண்டு வருடங்கள் முடிந்து விட்டன. இவருக்கு எந்தவிதமான நோய்களும் இதன் பின்பு ஏற்படவில்லை. இது பற்றி திரு. நாகலிங்கம் அவர்கள் தன்னுடைய வசனத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.

''எல்லா வகையான வருத்தங்களையும் குணமாக்கக் கூடிய மிகப் பெரிய வைத்திய அதிகாரியான சந்நிதியானை நம்பித்தான் நான் இங்கே வந்தேன். இவருடனேயே இரண்டு வருடங்கள் தங்கியிருந்து பின்பு இவர் காட்டிய வழியிலேயே சென்று என்னுடைய எல்லா வகையான வருத்தங்களையும் இலகுவாக மாற்றி தற்பொழுது பூரண சுகதேகியாக இருக்கின்றேன்''

இவ்வாறு சுகதேகியாகிவிட்ட பின்பு நீண்ட காலம் ஆலயத்தில் தங்கி ஆலயப் பூசகர்களுக்கு வேண்டிய எல்லாவிதமான உதவி ஒத்தாசைகளையும் செய்து வந்தார்கள். அத்துடன் பூசைச் செயற்பாடுகளுக்கு தேவையான தொண்டுகளையும் செய்து முழு நேரத் தொண்டனாக அங்கே செயற்பட்டுக் கொண்டிருந்ததையும் காண முடிந்தது.

இவ்வாறு உடல் நோய், உள நோய் என்பவற்றிற்காக சந்நிதியானை நாடி வந்து முழுமையாக நிவாரணம் பெற்றுச் செல்கின்றவர்களின் எண்ணிக்கையை எம்மால் பட்டியல் இட்டுக் காட்டத்தான் முடியுமா?

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியில் நடந்து கொண்டிருப்பவை....

அருள்வாக்கு கூறும் ஆலயங்களில் ஆவரங்கால் கண்ணன் ஆலயமும் ஒன்றாகும். அங்கே அருள்வாக்கு கூறும் அம்மாவை அனைவரும் கண்ணன் அம்மா என அழைப்பார்கள். அவருக்கு அவரது தொண்டை தொடர்பான வருத்தம் நீண்ட காலமாக இருந்து வந்தாலும் அண்மையில் அது மிக மோசமடைந்து காணப்பட்டது. இதனால் அவர் உணவு உண்ண முடியாத அளவுக்கு அவரது தொண்டைப் பகுதி மிகவும் பெரிதாக வீக்கம் அடைந்திருந்ததுடன் பெரும் வேதனையையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. இவை அனைத்தும் சேர்ந்து அவர் உயிர் தப்பமாட்டார் என்ற சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அவரது உறவினர்கள் அவருக்கு இறுதிப் பாலையும் பருக்கும் செயற்பாட்டையும் மேற்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் சந்நிதியானது மெய்யடியாராகவும் காணப்பட்ட அவருக்கு சந்நிதியானது கனவுகள் காட்சிகள் கிடைத்து சந்நிதியானிடம் வந்தடைந்தார்கள். இங்கேயுள்ள அருளாளர்களின் வழிப்படுத்தலுடன் சந்நிதியானை உள்ளம் உருகி வழிபட்டு சந்நிதியானது மருந்தையும் உட்கொண்டார்கள். என்ன அதிசயம் உயிர் பிரிந்துவிடும் நிலையில் இருந்தவர் இன்று சராசரி அடியவராக சுகம் அடைந்து ஆலய தரிசனத்திற்காக வந்து செல்கின்றார். 31.03.2017 வெள்ளிக்கிழமை பகல் 1.30 மணியளவில் கார்த்திகைத் திருவிழாவின்பொழுது சந்நிதியானது வீதி உலா இடம்பெற்றுக் கொண்டிருந்தது. அப்பொழுது அந்த அம்மையாருடன் உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தச் சந்தர்ப்பத்தில்தான் கண்ணன் அம்மா மேற்படி விபரங்களை தெரிவித்து தனது நோய் சுகமடைந்திருந்த அந்த தொண்டைப் பகுதியையும் அடையாளங்களையும் அடியேனுக்கு காண்பித்தார்கள். அத்துடன் சந்நிதியானதும் கண்ணனதும் புதுமைகளையும் அற்புதங்களையும் உள்ளம் உருகி ஆனந்த பரவசத்துடன் எடுத்துக் கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. க. தவேந்திரன் அவர்கள் ஆலய பிரதம பூசகருடனும் நூலாசிரியருடனும் இணைந்து கனடா ஆலயத்தில் சந்நிதியானுக்கு தொண்டுகள் புரிந்து கொண்டிருக்கும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியார்களே தொண்டர்கள் தொண்டர்களே அடியார்கள்

தாயகத்திலும் கனடாவிலும் செயற்படுகின்ற ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயங்கள் இரண்டுமே தொண்டர்களை அத்திவாரமாகக் கொண்டு செயற்படுகின்ற ஆலயங்களாகும். இந்த இரண்டு ஆலயங்களிலும் பல சந்தர்ப்பங்களில் அடியார்களே தொண்டர்களாகவும் தொண்டர்களே அடியவர்களாகவும் செயற்படுவதைக் காணலாம். தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ காலங்களில் பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் ஒன்றுகூடுவதை நாம் பார்த்திருக்கின்றோம். இவர்களை ஒழுங்குபடுத்தி செயற்படுத்துவதற்கென ஆலயத்தில் முறையான நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் ஆளணியினர் என்பன எதுவும் இங்கே காணப்படுவதில்லை. ஆனால் இங்கே கூடுகின்ற அடியவர்களில் அதிகமானவர்கள் தாங்களும் தொண்டர்கள் போலவே பொறுப்புடன் நடந்துகொள்வார்கள். அதுமட்டுமல்ல சந்நிதியில் ஒழுக்கமாகவும் பண்பாகவும் பயபக்தியுடனும் அடியவர்கள் நடந்து கொள்வதால் எல்லாவித செயற்பாடுகளும் சுமுகமாக நடந்தேறுவதே இங்கே காலம் காலமாக நடந்து வருகின்ற நடைமுறையாகும்.

கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தைப் பொறுத்தவரை மடப்பள்ளிச் செயற்பாடுகள் தொடக்கம் சாத்துப்படி செயற்பாடுகள் வரை எல்லாவித செயற்பாடுகளும் தொண்டர்களாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சிறப்புக்குரிய ஆலயமாக விளங்கி வருகிறது. இவ்வாறு தொண்டுகள் செய்கின்ற அனைவரும் சந்நிதியானது மெய்யடியவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறு தொண்டுகள் செய்பவர்களாகவும் மெய்யடியவர் களாகவும் விளங்கிய ஒரு குடும்பம்தான் திரு. திருமதி தவேந்திரன் குடும்பமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

திரு. க. தவேந்திரன் அவர்கள் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு மேற்கொண்டு வந்த தொண்டுகள் மிகவும் மகத்தானவை. இதுவரை அவரைப்போல இந்த ஆலயத்திற்கு தொண்டுகள் செய்தவர்கள் எவரும் இல்லை என்று கூறக்கூடிய அளவுக்கு அவர் அங்கே செயற்பட்டுக் கொண்டிருந்தார். இவர் தனது வீட்டை தங்குமிடமாகவும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தை தான் வாழ்கின்ற இடமாகவும் கருதிச் செயற்படுகின்றாரோ என்று மற்றவர்கள் நினைக்குமளவுக்கு இவருக்கும் இந்த ஆலயத்திற்குமான தொடர்புகள் இங்கே காணப்பட்டன. நித்திய பூசைச் செயற்பாடுகள், வருடாந்த மகோற்சவ கால செயற்பாடுகள், விஷேட தினங்கள் தொடர்பான செயற்பாடுகள், கந்தசஷ்டிக் கால செயற்பாடுகள் என எல்லாக் காலங்களிலும் இடம்பெறும் பூசை தொடர்பான செயற்பாடுகளிலும் அதற்கான முன் ஆயத்தச் செயற்பாடுகளிலும் இவரின் பங்களிப்புக்கு நிகர் இவரே என்பதை இவ்வாலயம் தொடர்பான அனைவரும் அறிவார்கள்.

இவ்வாறு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு அனைவராலும் விரும்பப்பட்ட இந்த விசுவாசமான தொண்டர் யாரும் சற்றும் எதிர்பார்க்காத வகையில் 01.03.2017 இல் சிவபதம் அடைந்த செய்தி அறிந்து அனைவரும் மீளாத்துயரில் மூழ்கிப் போயுள்ளனர்.

அமரர் க. தவேந்திரன் ஐயாவின் சேவையை ஆலயம் தொடர்பான அனைவரும் நினைவுகூர்ந்து அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் செய்தியையும் உணர்வினையும் மலரின் வாசகர்களுடனும் பகிர்ந்துகொள்ளுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

289487
14039CC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயன்மார் காலத்தில் மட்டுமல்ல தற்பொழுதும் ஆண்டவனின் அற்புதங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. கலியுகக் கந்தன் சந்நிதி முருகனின் அற்புதங்கள் இதனை இப்பொழுதும் எமக்கு எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் மானிட அறிவுக்குட்பட்ட எம்மால் உணரக்கூடிய ஒரு சில துளிகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்த நிஜங்களை நீங்கள் வாசிப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பம் கூட ஒருவகையில் உங்களுக்கு கிடைத்த ஒரு பேறுதான் என்பதை இதனை உணர்வுடன் வாசிக்கும்பொழுது நீங்கள் உணர்ந்து கொள்ளமுடியும்.

- ஆசிரியர்

தமிழ்ப்பூங்கா, நெல்லியடி - 0212264014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org